Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிர

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!

மகாராசி சில்க்ஸ்

சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P. No - 0777286247

(c-2203)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 04 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 05 (20.10.2004) புதன்கிழமை இதழ்: 20

# புலிகளின் அரசியல் விவகாரக் குழுவுடன் நோர்வேத் தரப்பு இன்று முக்கியபேச்சு!

## ஒஸ்லோவில் நடைபெற ஏற்பாடு

(ஒஸ்லோ)

**அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்கள் –**

**ஐரோப்பாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினரை இன்று சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.**

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது கடந்த 11 ஆம் திகதி இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தபோது இந்தியத் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்தும் விதார் ஹெல்கிசன் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவுக்கு எடுத்துரைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேச்சுநடத்தினார். லண்டனில் உள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கரும், அடேல் பாலசிங்கமும் கலந்துகொண்டனர்.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்த எரிக் சொல்ஹெய்ம், இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து அந்த நாட்டு இராஜதந்திரிகளுடன் நடத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ சிகிச்சைக்காக சூசை வெளிநாட்டுக்கு!

அரச சமாதான செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத்தளபதியான கேணல் சூசை (தில்லையம்பலம் சிவனேசன்) நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக வெளிநாட்டிற்குச் சென்றிருப்பதாக இலங்கை சமாதானச் செயற்பாட்டை கூட்டிணைக்கும் செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற சண்டையொன்றின் போது சிறப்புதளபதி கேணல் சூசைக்கு ஏற்பட்ட காயத்தின் உபாதைக்கு வெளிநாட்டில் சிகிச்சை தேவைப்படுவதாக நோர்வேத் தூதரகம் தகவல் தந்ததன்படி மனிதாபிமான ரீதியில் இந்த விஜயத்துக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்ததாக சமா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

ஐ.தே.க. ஏற்பாட்டில் நடந்தது

(கொழும்பு)

## கிங்ஸ்லி இராசநாயகம் நேற்று சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் கடந்த ஏப்ரல்

காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

க்கைக்கான விசேட சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது கடந்த 11 ஆம் திகதி இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தபோது இந்தியத் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்தும் விதார் ஹெல்கிசன் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவுக்கு எடுத்துரைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேச்சுநடத்தினார். லண்டனில் உள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கரும், அடேல் பாலசிங்கமும் கலந்துகொண்டனர்.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்த எரிக் சொல்ஹெய்ம், இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து அந்த நாட்டு இராஜதந்திரிகளுடன் நடத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

கடந்த காலத்தில் இடம்பெற்ற சண்டையொன்றின் போது சிறப்புதளபதி கேணல் சூசைக்கு ஏற்பட்ட காயத்தின் உபாதைக்கு வெளிநாட்டில் சிகிச்சை தேவைப்படுவதாக நோர்வேத் தூதரகம் தகவல் தந்ததன்படி மனிதாபிமான ரீதியில் இந்த விஜயத்துக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்ததாக சமா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

## ஐ.தே.க. ஏற்பாட்டில் நடந்தது

(கொழும்பு)



கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பொது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றவேண்டும் எனக் கோரி ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டங்கள் கொள்ளுப்பிட்டிச்சந்தி, கொம்பனித்தெருச் சந்தி, மருதானை தொழிநுட்ப கல்லூரிச்சந்தி, கொச்சிக்கடை அந்தோனியார் கோவிற்சந்தி ஹைட்பாக் சதுக்கம் ஆகியவற்றில் இடம்பெற்றன.

இந்த ஆர்பாட்டங்களில் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர். அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினை கட்டுப்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் உடனடிநடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அதிகரித்து வரும் வாழ்க்கைச்செலவிற்கு ஏற்ப அரசாங்கம் சம்பள உயர்வினை வழங்கவேண்டும் என (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிங்ஸ்லி இராசநாயகம் நேற்று சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட கிங்ஸ்லி இராசநாயகம் நேற்று மாலை 6.15 மணியளவில் ஜயந்திபுரத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவத்தின்போது, அவரது மெய்க் காப்பாளாரான பொலிஸ் கொன்ஸ்டபிள் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டிலிருந்து ஜயந்திரபுரத்திலுள்ள காணிக்கு வழமைபோல் சென்று திரும்புவதற்காக வாகனத்தில் ஏறிய போது மோட்டார் சைக்கிளில்வந்த இரண்டு இளைஞர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது. இந்த துப்பாக்கிச் சூட்டில் கிங்ஸ்லி

(12 ஆம் பக்கம் பார்க்க)




# யாழ்.பஸ்நிலையத்தின் முன்பாக அடையாள எதிர்ப்புப் போராட்டம்

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் நான்காவது ஆண்டு நினைவு தினமான நேற்று இந்தப் படுகொலையின் சூத்திரதாரிகளை சட்டத்தின்முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்குமாறு கோரியும் -

வடக்கு - கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டித்தும் - நேற்று யாழ்.நகரில் அடையாள எதிர்ப்புப் போராட்டமொன்று ஊடகவியலாளர்களால் நடத்தப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் நடந்த இந்த எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் - பத்திரிகையாளர்களின் ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும், உண்மையை எழுதுபவர்களுக்கு துப்பாக்கிவேட்டு போன்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)



# கூட்டமைப்பு எம்.பிக்களுடன் கேணல் சொர்ணம் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

ஆயுதங்கள் மூலமாக மட்டும் மக்களுடைய உரிமைகளையோ, மண்ணின் பாதுகாப்பையோ, நிலை நிறுத்த முடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்தார்.

அந்தவகையில் மண்ணையும், மக்களையும், அவர்களது வாழ்வுரிமைகளையும் மீட்டெடுப்பதற்கு ஆயுதப் போராட்டம் எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு பிரதேச அபிவிருத்தியும் முக்கியத்துவமாகும்.

இந்த நிலையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற தமிழ் மக்களுடைய வாழ்வை, அபிவிருத்தி செய்வதற்கு அனைவரும் முயற்சி செய்ய வேண்டுமென கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், தன்னைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான விஞ்ஞான பாட மாதிரி வினாத்தாள் இன்றைய நமது ஈழநாட்டில் வெளியாகிறது.**



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# உயர்தர மாணவர்களுக்கு வலுவூட்டல் வகுப்புகள்!

(சுதுமலை)

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தில் மூன்று பாடசாலைகள் இணைந்து க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மாலைநேர வலுவூட்டல் வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

அடுத்த ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள நான்கு பிரிவு மாணவர்களுக்குமே வலுவூட்டல் வகுப்புக்கள் நடத்தப்படுவதாகவும், இதில் மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை ஆகிய பாடசாலைகளின் ஆசிரியர்களைக் கொண்டே கூட்டாக மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

மாணவர்களது பெறுபேறுகளையும் அடைவு மட்டத்தையும் அதிகரிக்கும் நோக்கில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கணித, விஞ்ஞான, வர்த்தகப் பிரிவுகளுக்கான வகுப்புக்களும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கலைப் பிரிவுக்கான வகுப்புக்களும் இடம்பெறுவதாகவும் அலகு ரீதியான மீட்டலும் பரீட்சைகளும் இடம்பெறும் எனவும் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜெ. சூரியகுமாரி தெரிவித்தார். (91)

# சேவைநாடும் மகளிர் அமைப்பின் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு யாழ்ப்பாணத்தில் புதிய செயற்திட்டம்!

(யாழ்ப்பாணம்)

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் குழந்தைகளுக்கான செயற்திட்டம் ஒன்று "தேவை நாடும் மகளிர்" அமைப்பினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

வீட்டில் ஏற்படும் வன்முறைகள், வேறு வடிவங்களில் ஏற்படும் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, குறிப்பாக பெண்கள் குழந்தைகளுக்கு உதவுவதற்காகவே மேற்படி அமைப்பு இந்தச்செயற்திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

இந்த அமைப்பின் தலைமைக் காரியாலயம் இல.20, டீல் பிளேஸ், கொழும்பு-03. என்னும் முகவரியில் அமைந்துள்ளது. இதன் கிளை நிறுவனங்கள் கண்டி, மாத்தளை, பதுளை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் செயற்பட்டு வருகின்றன. அதேபோல் தற்போது யாழ்ப்பாணத்தில் 'சாந்திகம்' உளவளத் துணை நிறுவனத்தின் கீழ் 22/1 றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் இதன் கிளை நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பானது வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகளுக்கு உளவளத்துணை வழங்குவதுடன் இலவச சட்ட ஆலோசனைகளும், உதவிகளும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பாதிக்கப்பட்டோர் இந்த அமைப்புடன் தொடர்புகொள்ளலாம் என யாழ்ப்பாணக் கிளையின் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

# கசிப்பு உற்பத்தியைத் தடுப்பதற்கு உதவுமாறு மாணவர் கோரிக்கை!

உரும்பிராய் பகுதிகளில் அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தியை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மாணவர்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து மாணவர்கள் ஒப்பமிட்டு அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மாணவ சமுதாயத்தவர்களாகிய நாங்கள் தங்களுக்கு எழுதும் உருக்கமான வேண்டுகோள் - எமது கிராமமாகிய உரும்பிராய் மேற்கு அன்னங்கை. இந்தக் கிராமத்தில் கசிப்பு உற்பத்தியானது பலதடவை உற்பத்திக்கு தடைசெய்ய நடவடிக்கைகள் எடுத்தும் இந்த உற்பத்தியை நிறுத்த முடியாமல் உள்ளது.

எமது கிராமம் கல்வி நிலையில் பின்தங்கிய கிராமம் ஆகும். எமது சனசமூக நிலையத்தில் மாலை நேரத்தில் கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது. இந்தநேரங்களில் மது போதையில் நின்று எங்கள் கல்விக்கு இடையூறு ஏற்படுத்துகின்றார்கள்.

வீதியின் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்துகின்றார்கள். மற்றும் இளம் சமுதாயம் போதைக்கு அடிமையாகி வீதிகளில் நின்று அநாகரிகமற்ற பேச்சுக்கள், நடத்தைகள் போன்றவற்றிலும் ஈடுபட்டுவருகின்றனர் மாலை நேரத்தில் எங்கள் வீதியால் போவது என்பது பெரும் சிரமம். தினமும் சண்டைகளும் சகிக்க முடியாத பேச்சுக்களும் இடம்பெற்று வருகிறது. பெண்கள்கூட இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகிறார்கள். இத்தகைய நிலைமையினால் நாங்கள் எங்கள் கல்வியை தொடரமுடியாமல் உள்ளது.

இன்னும் எங்கள் கிராமம் கல்வி நிலையில் பின்நோக்கிச் செல்கிறது. ஆகவே, தயவுசெய்து மாணவ சமுதாயத்தவர்களாகிய நாங்கள் தங்களிடம் வேண்டுவது இந்தக்கசிப்பு உற்பத்திக்கு தடைவிதித்து எங்கள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உதவுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டார் வழக்காற்றியல் நூல் அறிமுக விழா!

(யாழ்ப்பாணம்)

கலாநிதி கி.விசாகரூபன் எழுதிய 'நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம்' நூல் அறிமுக விழா நாளை மாலை 3.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்துறைத்தலைவர் கலாநிதி அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நூலினை வெளியிட்டுவைக்க யாழ். பல்கலைக் கழக கல்வியியற்துறை தலைவர் மா.சின்னத்தம்பி முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் இ.மகேந்திரன் வெளியீட்டுரை நிகழ்த்த யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா ஆய்வுரை நிகழ்த்துவார்.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் கடந்த ஆண்டு பதவிக் காலம் முடிவடைந்துள்ளதையடுத்து, புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் - க.அருள்வேல் (சிரேஷ்ட விரிவுரையாளர்), செயலாளர்- கலாநிதி செ.இளங்குமரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்), துணைத்தலைவர்- பேராசிரியர் ந.ஞானக்குமரன், துணைச்செயலாளர் ச.விமல், பொருளாளர் திருமதி.சா.மகேந்திரன் மற்றும் ஏழு செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சாரணத் தலைவர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்க யாழ் மாவட்ட சாரணர் கிளைச்சங்க குருளை சாரணர் தலைவர்கள் மற்றும் சாரணர் தலைவர்களின் கூட்டம் இன்று பி.ப.2.45 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தச் சாரணர் தலைவர்கள் கூட்டத்தில் பிரதம ஆணையாளர் வருகை, கில்வெல ஒன்றுகூடல் பற்றி ஆராயப்படவிருப்பதனால் அனைத்து யாழ்.மாவட்ட சாரணர் கிளைச்சங்க சாரணர் தலைவர்களையும் தவறாது வருகை தருமாறு யாழ். மாவட்ட ஆணையாளர் அ.ஏகாம்பர நாதன் தெரிவித்தார். (58)

# கடையுடைக்கும் முயற்சியை கைவிட்டு தப்பியோடிய திருடர்!

(கோண்டாவில்)

கடை உடைத்து திருடவந்த திருடர்கள் கடைக்காரர் வருவதைக்கண்டு தப்பியோடிய சம்பவமொன்று கோண்டாவில் சந்தியிலுள்ள வீடியோக் கடையொன்றில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்துள்ளது.

அதிகாலை 5 மணியளவில் கடை உடைப்பதற்கென கள்ளத் திறப்புக்களைப் பயன்படுத்தியவேளை, கடை உரிமையாளர் வருவதைக் கண்டு அவர்கள் தப்பியோடிவிட்டனர்.

இந்தப்பகுதியில் அதிகரித்துவரும் தொடர் திருட்டுக்களை அறிந்து அப்பகுதி வியாபாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது. (82)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(பருத்தித்துறை)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெற்று வரும் நிகழ்வுகளில் நாளை மறுதினம் காலை 10.00 மணியளவில் 'பெரியபுராணம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றுவார். (14)



யாழ்.கோட்ட அதிபர் சங்கத்தினால் அண்மையில் இளைப்பாறிய அதிபர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ரீ.இராஜரட்ணம் மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம். (91)

## நவராத்திரிவிழா

தென்மராட்சி பிரதேச செயலக நலன்புரிக்கழகம் நடாத்தும் நவராத்திரிவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

# திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் கலாசார மண்டபத் திறப்பு விழா!

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் அமைக்கப்பட்ட திக்கம் கலாசார மண்டபம் திறப்புவிழாவும், மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திக்கம் மத்திய சன சமூக நிலையத் தலைவர் க. சுதேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்கே.சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், ஜி.ஜி.கஜேந்திரகுமார், ந.ரவிராஜ், திருமதி பத்மினி சிதம்பரநாதன், கி. சிவநேசன், மாவை சேனாதிராசா, மா.க.ஈழவேந்தன்ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா, பருத்தித்துறைப் பிரதேச செயலர் சி.வசந்தகுமார் மற்றும் வே.கணேசமூர்த்தி ஆகியோரும்கலந்து கொள்ளவுள்ளனர். (12)

## பரீட்சை ஆரம்பம்

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலை முதற்தேர்வு பரீட்சைகள் மீண்டும் அடுத்த சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப்பரீட்சை முன்னர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினால் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (72)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

செல்லையா மகேந்திரம் (5917 52790 v) கீரிமலை றோட், சித்தங்கேணி என்பவரது தேசிய அடையாள அட்டை ஆனைக்கோட்டை வீதி யூடாக கொக்குவில் - ஏழாலைக்கிடையில் மணிபர்சுடன் தவறிவிட்டது. இதை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நமது ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தகவல் செ.மகேந்திரம் அம்பாள் லோன்றி, ஆனைக்கோட்டை. (C/3279)


மலிவு மலிவு கொள்ளை மலிவு

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

(16-10-04) தொடக்கம் 11-11-2004 வரை சகல விதமான உடுபுடவைகள் மற்றும் ரெடிமேட் உடுப்புக்களையும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

லைடன் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்.

222-2381 (C/3264)

திறைஞ்சனைல் சங்கானை

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த



அரசாட்சி

(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00

ராஜா யாழ்ப்பாணம்.

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கை -யிலும் ஒரே தின வெளியீடான

ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

7/G ரெயின்போ காலனி

பு.நே 10.30, 2.30, 9.30மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2725)




அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சத்தியசீலன், அதிபர் சேதுராஜா மற்றும் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் மலர் மாலை அணிவித்து கௌரவித்திருப்பதைக் காணலாம். (12)

# சீக்கியப் பெண்ணைக் கொன்றதாக இலங்கையர் உட்பட இருவர் கைது!

## இன்னொரு இலங்கையர் தேடப்படுகிறார்


தேடப்படும் விஜயராசா

(கனடா)

கனடாவில் கடந்த மார்ச் மாதம் இடம் பெற்ற கொலை தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த, கனடாவில் குடியுரிமை பெற்ற ஒருவரும், கனடாப் பிரஜையும் கனடாப பொலிஸாரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கொல்லப்பட்டவர் அம்ரீதா சிங் என்ற பெண்ணாவார்.

ஸ்ரீன்விக் கொக்கும் சன்ட் (வயது 21) நவநீதன்-குணானந்தன் (வயது 24) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். இந்தக் கொலையின் முக்கிய சூத்திரதாரி எனக் கருதப்படுகிறது. இலங்கையரான விஜயராசா - மாணிக்கவாசகர் (வயது 23) கடனாவை விட்டுத தப்பியோடிவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி அதிகாலை அம்ரீதா சிங்கும், அவரது இரண்டு சகோதரர்களும் தமது உறவினர் ஒருவரின் வீட்டிலிருந்து காரில் வந்தனர்.

இவ்வாறு இவர்கள் வந்த அன்றைய இரவு - அம்ரீதா சிங்கின் குடும்ப அங்கத்தவர்கள், இரவு கேளிக்கை விடுதி ஒனறில், மேலே குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் சிறு சச்சரவில் ஈடுபட்டதாகக் கனடாவின் விசாரணையாளர்கள் நம்புகின்றனர்.

ஆனால் இவர்களுக்கிடையிலான இந்தச் சச்சரவில் அம்ரீதா சிங் எவ்விதத்திலும் பங்கு பற்றவில்லை. இவர்களுக் கிடையிலான இந்தப் பிரச்சினையை அவர் அருகில் நின்று பார்த்துக் கொண்டே நின்றுள்ளார்.

இதன் பின்னர், இவர்கள் மூவரும் காரொன்றை வாடகைக்கு அமர்த்தி தமது வீட்டிற்கு சென்றனர். ஆனால் இவர்களைப் பின் தொடர்ந்து வேறொரு காரில் அந்த மூவரும் சென்றனர்.

இந்த நிலையில் அம்ரீதா சிங்கும், அவரது சகோதரர்களும் அதிகாலை 2.47 மணிக்கு தமது வீட்டைச் சென்றடைந்தனர். பின்னர் அவர்கள் காரிலிருந்து இறங்கியபோது இவர்களைப் பின் தொடர்ந்து சென்ற மூவரில் ஒருவர் - அவர்களது காரில் இருந்து இறங்கிய அம்ரீதா சிங் உட்பட அவரது சகோதரர்களைத் துரத்திச் சென்றனர். உடனே அவர்கள் தமது வீட்டுக்குள் ஓடிச சென்று கதவைச் சாத்திவிட்டு இருந்தனர்.

இந்த வேளை அவர்களை துரத்திச் சென்ற நபர் சாத்தப் பட்டிருந்த கதவை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால், அம்ரீதா சிங்கின் உடலில் இரண்டு துப்பாக்கி ரவைகள் பாய்ந்து அவர் உயிரிழந்தார். அவரது இரண்டு சகோதரர்களும் வீட்டின் ஒரு பகுதியில் பாதுகாப்புத் தேடிக் கொண்டதில் காயம் எதுவும் இன்றித் தப்பித்துக் கொண்டனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதனிடையே துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியவரென பொலிஸார் நம்பும் மாணிக்கவாசகர் விஜயராசா பொய்ப்பெயரைப் பாவித்து கனடாவை விட்டுத் தப்பிச் சென்றிருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இவரைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்தைப் பெற்றுள்ள கனடாப் பொலிஸார், இவர் எங்கிருந்தாலும் கைது செய்யப்படுவதற்கு வசதியாக இன்டர் போல் மற்றும் ஆர்.சி.எம்.பி என்ற அமைப்புக்களுடனும் தொடர்பை வைத்துள்ளது. அவர்கள் இவரைத் தேடி வருகின்றபோது அவர் எங்குள்ளார் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

இவரைக் கைது செய்வதற்காகப் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ள கனடாப் பொலிஸார் - இவர் தனது பெயரை, விஜய், மற்றும் புல்லட் என வைத்துள்ளதுடன், தனது தலைமுடியை மிகவும் கட்டையாகவும் வெட்டியிருப்பார் எனத் தெரிவித்தனர்.

மாணிக்கவாசகர் இலங்கையில் பிறந்து கனடாவில் தற்போது பிரஜாவுரிமை பெற்றுள்ளார். இவரது உறவினர்கள் ரொறன்ரோ, மொன்றியல், வன்கூவர். இலங்கை, இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலியா போன்ற இடங்களில் வாழ்கின்றனர். சில வேளைகளில் அவர் இந்த இடங்களில் மறைந்து வாழலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தொடர்பாக ஏதாவது தகவல் தெரிந்தால் 905 - 453 - 3311 1-800 - 222 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மோசடியில் ஈடுபடுகின்ற குழுவைப் பிடிக்க விசேட குழுவொன்று பொலிஸாரால் நியமனம்

போலிக் கடன் அட்டைகளைப் பயன்படுத்தி, கொழும்பில் உள்ள வர்த்தக நிலையங்களில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்த 15 மலேசியர்களைக் கைது செய்ய விசேட குழு ஒன்றை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு நியமித்துள்ளது.

அண்மையில் கொள்ளுப்பிட்டியில் உள்ள வர்த்தகநிலையம் ஒன்றுக்குச் சென்ற மலேசியத் தம்பதிகள் போலிக்கடன் அட்டையைப் பயன் படுத்தி 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கத்திலான கைக் கடிகாரம் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே, அண்மையில் மலேசியாவில் இருந்து இலங்கைக்கு வந்து போலிக்கடன் அட்டைகளைப் பயன்படுத்தி, பொருட்களைக் கொள்வனவு செய்த 15 பேர் கொண்ட குழுஒன்றைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்தக் குழுவின் செயற்பாடுகளை அவதானித்து அவர்களைக் கைது செய்வதற்காகவே பொலிஸார் விசேட குற்றப் புலனாய்வுக் குழுவொன்றை அமைத்துள்ளனர்.

கடன் அட்டை மோசடியில் ஈடுபட்ட இருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பொலிஸ் அதிகாரி ஒருவர் - அண்மைக் காலங்களாக வெளிநாட்டவர்களின் கடன் அட்டை மோசடிகளுக்குத் தளமாக இலங்கையைப் பயன்படுத்தி வருவதாகவும், இதைக் கட்டுப்படுத்துவதாயின் வெளிநாட்டவர்கள் தொடர்பான இலங்கைச் சட்டங்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கடந்த வாரம் மலேசியாவில் ஒருவரால் சட்டவிரோதமாக நடத்தப்பட்டு வந்த சீடி உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு, அதன் உரிமையாளர் கைது செய்யப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக விமானப்படை தலைமையகம் இடம் மாற்றம்

இலங்கை விமானப் படையின் தலைமை அலுவலகம் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக, பலபக்கக் கட்டடத் தொகுதிக்கு இடம் மாற்றப்படவுள்ளது. இதில் ஒரு பகுதி பழைய கட்டடத்துடன் இணைந்த பகுதியாகும்.

விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தனது பழைய அலுவலகத்திலிருந்து, புதிய இடத்துக்கு அடுத்த வாரம் இடம் மாறவுள்ளார்.

இவ்வாறு இடம் மாறும் இந்த விமானப்படைத் தலைமையகத்துக்கு, பலத்த பாதுகாப்பை வழங்குமாறும் விமானப்படைத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் விருந்தினர் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் இந்தப் புதிய கட்டடத் தொகுதிக்குள் தமது வாகனங்களுடன் உட்செல்வதறகு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும், இந்தப் புதிய சட்டம் விமானப் படையினரின் சிரேஷ்ட அதிகாரிகளாகவுள்ள விமானப் படையின் பணிப்பாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப் படையில் நீண்ட காலம் சேவையாற்றிய சிரேஷ்ட உயரதிகாரிகள், தமது வாகனங்களுடன் புதிய விமானப் படை முகாம் கட்டடத் தொகுதிக்குள் செல்லமுடியும்.

ஆனால், இவர்கள் புதிய விமானப்படைத் தலைமையக வளாகத்துக்குள் பிரவேசிக்கும்போது, இவர்களது வாகனங்களை, விமானப் படையின் குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் விசேட பிரிவு ஒன்று - பரிசோதித்த பின்னரே அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு

# இணைப்பை எதிர்த்து கோட்டேயில் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கோட்டே அரச மரத்துக்கு முன்னால் - இன்று ஜாதிக ஹெல உறுமய சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தவிருக்கிறது.

அத்துடன், சோம தேரர் மரணம் அடைந்தது குறித்து, ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் செயற்பாட்டை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று கோரி, கையொப்பம் சேர்க்கும் நிகழ்வும் கோட்டே புகையிரத நிலையத்துக்கு முன்னால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய ரத்னதேரர் மேற்படி தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டில் ஆயுதங்களை ஒப்படைத்து ஜனநாயக வழி முறையில் சேர்ந்து கொள்ள விடுதலைப் புலிகள் இணங்கியிருந்ததன் காரணமாக வடக்குக் கிழக்கும் இணைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் வசிப்பதைத் தமிழர் தாயகமாகக் கருதமுடியாது. வடக்கையும் - கிழக்கையும் இணைப்பதற்கு எந்தவித நியாயமுமில்லை என்றும் ரத்ன தேரர் மேலும் தெரிவித்தார்.

பிரதான அரசியற் கட்சிகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதால், ஜாதிக ஹெல உறுமயவை நசிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாநாட்டில் பங்குபற்றிய கோட்டேகொட அமர கீர்த்தி தேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்துடனோ அல்லது வேறு எந்த அரசியல் கட்சியுடனோ சேர்ந்து கொள்ள மாட்டாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.





நேற்று முன்தினம் குடாநாட்டுக்கு வருகைதந்த பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ பலாலி விமானநிலையத்தில் வரவேற்கப்படுவதையும், பலாலி படைத்தலைமையகத்தில் குடாநாட்டுக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனை சந்தித்து உரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி கொலை முயற்சி; விசாரணைகள் ஒத்திவைப்பு!

கடந்த 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது கொழும்பு நகரசபை மண்டபத்தில் வைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை கொலை செய்ய முயற்சித்தமை தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விடுத்தது.

நான்கு பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகள் முடிவடையும்வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

# முஸ்லிம் இளைஞர் துப்பாக்கியுடன் கைது

மட்டக்களப்பு ஏறாவூர் ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு முஸலிம் இளைஞரொருவர் ரி-56 ரக துப்பாக்கிகளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஏ.எம்.மொகமட் பரீட் என்ற இந்த இளைஞர் ஆயுதங்களுடன் பயணம செய்வதாக கிடைத்த தகவலையடுத்து, அங்கு விரைந்துசென்ற பொலிஸார் இவரைக் கைதுசெய்தனர்.

பொலன்னறுவை கல்லல்ல பகுதியில் இந்த ஆயுதத்தை விற்பனை செய்வதற்காக மட்டக்களப்பு - கொழும்பு இரவு ரயிலில் பயணம் செய்யவிருந்த சமயம் கைது செய்யப்பட்ட இவர், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

எதிர்வரும் முதலாம் திகதி வரை இந்த நபரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை நீதிபதி ஏ.எச்.எம்.அஜ்மீர் பிறப்பித்தார்.

## சென்னை டெஸ்ட் போட்டியில்
# இரு அணிகளுக்குமே சமமான வெற்றிவாய்ப்பு!
### கங்கூலி தெரிவிப்பு



(சென்னை)

சென்னை டெஸ்ட் போட்டியில் இரு அணிகளுக்கும் வெற்றிவாய்ப்பு சம அளவில் இருந்தது எனறு இந்திய அணித் தலைவர் கங்கூலி கூறினார்.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இடையே சென்னையில் நடந்த 2 ஆவது டெஸ்ட்போட்டி மழையால் சமநிலையில் முடிவடைந்தது.

இந்தப் போட்டிகுறித்து இந்திய அணித் தலைவர் கங்கூலி கூறியதாவது -

அவுஸ்ரேலிய அணி 4 ஆவது நாளில் சரிவில் இருந்து மீண்டதை பார்க்கையில் ஆட்டத்தில் எதுவும் நடக்கலாம். மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது ஏமாறறம் அளிக்கிறது.

இந்த டெஸ்டில் இந்திய அணியின் துடுப்பாட்டம் நன்றாக இருந்தது. அவுஸ்ரேலிய அணியில் ஜிலெஸபி-மார்ட்டின் இணை ஆட்டம் திருப்பமாக இருந்தது இவவாறு கஙகூலி கூறினார்.

இந்த ஆட்டம் குறித்து அவுஸ்ரேலிய அணித் தலைவர் கில்கிறிஸ்ட் கூறுகையில் - ஆட்டத்தின் முடிவு யாருக்கும் சாதகமாகலாம் என்ற நிலை இருந்தது. வெற்றி பெறவேண்டும் என்பதில் இருஅணிகளும் ஆர்வமாக இருந்தோம். எங்களை விட இந்திய அணி போட்டியில் சற்று முன்னணியில் இருந்தது. மழையால்கடைசி நாள் ஆட்டம் ரத்து செய்யப்பட்டது, ஏமாற்றம் அளிக்கிறது. முதல் இனிங்சில் எங்கள் துடுப்பாட்டம் மோசமாக இருந்தது.

# தொடரை வென்றெடுப்பதே எனது முதலாவது இலக்கு!
### அனில் கும்ளே கூறுகிறார்




(சென்னை)

எஞ்சியுள்ள 2 போட்டிகளில் வெற்றி பெற்று இந்தியாவுக்குத் தொடரை வெனறு தருவதே எனது முதல் இலக்கு என கும்ளே கூறினார்.

சென்னையில் நடைபெற்ற இந்திய அவுஸரேலிய அணிகளுக்கு இடையேயான 2ஆவது டெஸ்ட்போட்டி மழையின் காரணமாக சம நிலையில் முடிவடைந்தது. இப்போட்டியில் 13 விக்கெட்டுகளை கைப்பற்றிய அனில் கும்ளே ஆட்டநாயகனாகத் தேர்வுபெற்றார்.

இதன் பிறகு அவர் கூறியதாவது- சென்னை ஆட்டம் சமநிலையில்முடிந்தது கவலையாகத் தான் உள்ளது. எஞ்சியுள்ள 2 போட்டிகளில் வெற்றியைக் கைப்பற்றி இந்தியாவுக்கு தொடரைப் பெற்றுத் தருவதே எனது முதல் இலக்கு. அடுத்ததாக 500 விக்கெட்டுக்கள் இலக்கை கடந்து சாதனை படைக்கவேண்டும் என்பது எனது 2 ஆவது இலக்காகும்.

சென்னை போட்டி மழையால் கைவிடப்பட்டது ஏமாற்றமளிக்கிறது. முதல் 3 நாட்கள் ஆட்டம் இந்தியாவின் கைவசம்தான் இருந்தது. அவுஸ்ரேலிய அணி வீரர்கள் மார்ட்டினும் ஜிலெஸ்பியும் ஆட்டத்தின் போக்கை சற்று மாற்றினர். ஆயினும் பிறகு மீண்டும் இந்திய அணி தன்வசமாக்கிக் கொண்டது.

ஆடுகளத்தைப்பொறுத்தவரையில் பெங்களூரைக் காட்டிலும் பவுண்ஸர்கள் சற்று அதிகமாகவே இருந்தது. எனவே எங்களுக்கு விக்கெட்டுகள் அதிகமாகவே கிடைத்தன என்று கூறினார்.

# இடுப்பு வலியால் இர்பான் பதான் நாக்பூர் டெஸ்டிலிருந்து நீக்கம்!

(சென்னை)

நாக்பூரில் நடைபெறவுள்ள 3ஆவது டெஸட் போட்டிக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் இர்பான் பதான் நீக்கப்பட்டுள்ளார். ஆஷிஷ் நெஹ்ரா சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையேயான 3ஆவது டெஸ்ட்போட்டி நாக்பூரில் நடைபெறவுள்ளது. இதில் விளையாடுகின்ற இந்திய அணி வீரர்கள் பட்டியல் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அதில் சென்னை போட்டியின்போது அணியில் இடம்பெற்று விளையாடிய இர்பான் பதான் இடுப்புவலி காரணமாக நீக்கப்பட்டுள்ளார். ஆஷிஷ் நெஹ்ரா மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ளார்.

சென்னை போட்டியின்போது ஏராளமான பிடிகளைக் கோட்டைவிட்ட விக்கெட் காப்பாளர் பார்த்திவ் பட்டேல் குறித்து தேர்வுக் குழுவில் விவாதிக்கப்பட்டது. பட்டேல் இடம் பெற வேண்டும் என்று கங்கூலி பிடிவாதமாக இருந்ததால் இவர் இடத்தை தக்கவைத்துக் கொண்டார். அணியின் 15 ஆவது வீரராக சச்சின் டெண்டுல்கர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தியஅணி விபரம் வருமாறு

யுவராஜ்சிங், வீரேந்திர ஷேவாக், ஆகாஷ் சோப்ரா, சச்சின்டெண்டுல்கர், ராகுல்டிராவிட், சவ்ரவ்கங்கூலி, வி.வி.எஸ்.லக்ஷ்மன், முகமது கைவ், பார்த்திவ் பட்டேல், அனில்கும்ளே, ஹர்பஜன்சிங், சகீர்கான், ஆஷிஷ்நெஹ்ரா, அஜித் அகர்கர், முரளிகார்த்திக்.



# சினேக பூர்வ உதைபந்தாட்டம்

இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரிக்கும், யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான சினேக பூர்வ உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை சென். ஹெனறியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் 14 வயது, 16வயது, 18வயது, 20 வயது, ஆகிய நான்கு பிரிவு அணிகள் பங்குபெறவுள்ளன.

பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் நான்கு பிரிவுகளில் மூன்று பிரிவை சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி கொண்டது.

14வயதுப் பிரிவில் மகாஜனா கல்லூரி அணி 2-1 என்ற நிலையில் சென்பற்றிக்ஸ் அணியை வெற்றிகொண்டது. 16 வயதுப் பிரிவில் 1-0 என்ற நிலையிலும் 18 வயதுப் பிரிவில் 4-0 என்ற நிலையிலும், 20 வயதுப் பிரிவில் 6-0 என்ற நிலையிலம் யாழ்சென். பற்றிக்ஸ் அணி வெற்றிபெற்றது.

■ ■ ■

வடமராட்சிவலய பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டங்கள் இன்று பி.ப 2.30 மணிக்கு மனோகரா மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து விக்னேஸ்வரா கல்லூரியும் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரியு மோதவுள்ளன. (12)

# பீஜிங் மரதன் போட்டியில் பங்கேற்ற இருவர் மரணம்

சீனாவில் நடைபெற்ற பீஜிங் மரதன் போட்டியில் பங்குபற்றிய கல்லூரி மாணவர் ஒருவர் மற்றும் ஒரு மூத்த குடிமகன் உட்பட இரண்டு பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மரணமடைந்தனர். மற்றும் 17 பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மரதன் போட்டியில் கலந்துகொண்டு ஓடிய பீய்ஜிங் ஜியான்டாங் பல்கலைக்கழக மாணவர் லியூஹாங்பின் (20) மற்றும் ஒரு மூத்த குடிமகனான ஹூ (ஓய்வு பெற்ற அடையாளம் தெரியாத நபர்) ஆகிய இருவர் மருததுவ மனையில் சேர்க்கப்பட்டு நேற்றுமுன்தினம் மரணமடைந்தனர் என்று ஸின்குவா நியூஸ் ஏஜென்சி தெரிவித்தது.

இந்தப் போட்டியில் 17 கிலோ மீற்றர் தூரம் ஓடிய மாணவர் லியூபின்பு நிலை குலைந்து மயங்கி விழுந்தார். அவரை உடனடியாக ஹைடியான் மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றனர். அவசர சிகிச்சைக்குப் பிறகு அவர் இறந்து போனதாக அறிவிக்கப்பட்டது.

வடக்கு பீஜிங்கில் உள்ள அன் ஜென் மருத்துவமனை மாணவர் லியூ இறந்ததை உறுதிசெய்தது.

இது குறித்து மரதன் போட்டி நிர்வாகிகளிடம் கேட்டபோது அவர்கள் கருத்து எதுவும் கூறமறுத்துவிட்டனர்.

இந்தப் போட்டியின்போது மயங்கி விழுந்த 11 பேர் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பெற்றுவருகின்றனர். பீஜிங் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு பெண் அபாய கட்டத்தில் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

மேலும் போட்டியில் பங்கேற்ற 400 பேர் காலில் கொப்புளம் போன்றகாயங்களுக்காக சிகிச்சை பெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்த மரதன் போட்டியில் 25000 பேர் பங்கேற்றனர். இதில் கென்ய வீரர் ஜேம்ஸ் மொய்குவன் ஆண்கள் பிரிவிலும் சீன வீராங்கனை சன்யிங்ஜூ மகளிர் பிரிவிலும் சம்பியன் பட்டம் வென்றனர்.

# கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் அவையினால் யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே யாழ்.மத்திய கல்லூரியின் மாணவ முதல்வனாக இருந்தபொழுது தன்னுடைய கடமைகளை மேற்கொண்டிருந்த வேளையில் கோட்டையில் இருந்த இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகி மரணித்த விபுலானந்தன் ஞாபகார்த்தமாக வருடாவருடம் நடாத்தப்படும் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இந்தவருட சுற்றுப்போட்டிகள் இன்று யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் ஆரம்பமாக உள்ளது.

மேற்படி சுற்றுப்போட்டியின் ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் தலா ஐந்து பாடசாலை அணிகள் பங்குபற்றுகின்றன.(58)

# அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டி

யாழ்.மாவட்ட பாடசாலை 12 வயதுப் பிரிவு ஆண்களிடையே கடந்த வாரம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு மழை காரணமாகப் பிற்போடப்பட்ட யாழ்.மத்திய கல்லூரிக்கும் யாழ்.இந்துக்கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. (58)




# இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் கிப்ஸ், போயே அவசியம்!

(டர்பர்)

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்போட்டிகளில் அனுபவம் மிக்க வீரர்களான கிப்ஸ் மற்றும் போயே ஆகியோர் இடம்பெற வேண்டியது அவசியம் என்று தென்னாபிரிக்க அணியின் புதிய பயிற்சியாளரான ஜெனிஸ் தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டு குரேன்ஞே தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடியது. அப்போது இந்திய வீரர்களில் சிலர் மற்றும் தென்னாபிரிக்க வீரர்களான கிப்ஸ், போயே ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அடுத்தமாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. பொலிஸார் விசாரணை நடத்துவதால், இந்தத் தொடரில் கிப்ஸ், போயே பங்கேற்க மாட்டார்கள் எனக் கூறப்பட்டது.

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற சூதாட்டம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. அதைப் பற்றி எங்களுக்குப் பயமில்லை, கிப்சும், போயேயும் அனுபவம் வாய்ந்த வீரர்கள். அவர்கள் இந்திய சுற்றுப்பயணத்தில் கட்டாயமாகத் தேவை. இருவரின் திறமை அணிக்கு நன்கு பலத்தை சேர்த்தது.

இந்திய சுற்றுப்பயணம் திட்டமிட்டபடி நடைபெறும். இந்தத் தொடர் எங்கள் அணிக்கு மிகப பெரிய சவாலாகும் இவ்வாறு அவர் கூறினார்.

### இலங்கை - பாகிஸ்தான்
# முதல் டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது!

(கராச்சி)

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று பைசலாபாத் நகரில் அரம்பமாகவுள்ளது.

பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இலங்கை அணி - ஒரு நாள் போட்டித் தொடரில் விளையாடி பாக்ரெல் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதனையடுத்து இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி விளையாடவுள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களின் விபரம் -

பாகிஸ்தான் அணி - இன்ஸமாம் (தலைவர்) யாசிர் ஹமிட், இம்ரான்பர்கத், யூசுப் யுகானா, மொயின்கான், சொகைப் மலிக், சமி, ரசாக், யூனிஸ்கான், அக்தர், டேனிஷ்கனேரியா, சபீர் அகமது.

இலஙகை அணி - அத்தப்பத்து (தலைவர்) ஜெயசூரிய, ஜெயவர்த்தன, சங்ககார, ம.'. றூப், வாஸ், சந்தன, தில்காரா பெர்னாண்டோ, சமரவீர, முபாரக், டானியல், களுவிதாரண, மலிங்க.

# தேசியத் தலைவரின் வழிகாட்டலில் கடற்படையைப் பலப்படுத்தியுள்ளோம்

## கடற்புலிகளின் யாழ்.அரசியற்துறைப் பொறுப்பாளர் அருணன்

இன்று கடலன்னை மடியில் உறங்கிக்கொண்டிருக்கும் மாவீரர்கள், எமது போராட்டத்தை மேன்மைப்படுத்தியுள்ளனர். இதில் ரஞ்சன் அண்ணா விடுதலைப் புலிகளின் போராட்டத்தைப் பலப்படுத்தியவர். கரையே தெரியாமல் ஆழ்கடலில் தனது காலத்தைப் போக்காட்டியவர். இவர் கடலில் மட்டுமல்ல, அரசியலிலும் ஆலோசனைகள் வழங்கினார்.

கடலில் நாம் திட்டமிட்டுச் செய்த தாக்குதலகளைவிட, அந்த நிலைமை சூழ்நிலைகளுக்கு ஏற்ப திடீரென மேற்கொண்ட தாக்குதல்கள் எத்தனையோ வெற்றிகண்டுள்ளன என அண்மையில் வடமராட்சியில் நடைபெற்ற ‘அலைபாடும் பரணி’ நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு கடற்புலிகளின் யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அருணன் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இதில் அவர் தொடர்ந்து பேசுகையில் -

இந்தச் சந்தர்ப்பத்தில் கடற் கப்டன் நிமலனையும் நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளோம். சாதாரண போராளியாக இருந்து, கடற் கப்டன் வரை உயர்ந்தவர். இவர் 6 மாத காலமாக வல்வெட்டித்துறை அரசியல்துறைப் பணிமனையல் கடமையாற்றினார். இந்திய அரசாங்கத்தின் சதியாலும், இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாலும் எமது போராட்டத்தையும், அரசியலையும் கருத்திற்கொண்டு சரணடையவேண்டிய நிலைமை ஏற்பட்டும்கூட, இறுதிவரை தனது கப்பலிலேயே நின்று போராடி வீரச்சாவடைந்தார். இவற்றைவிட 3 போராளிகள் தம்மைத் தாமே பெற்றோல் ஊற்றி அக்கினியாகிக் காவியமாகிய சம்பவம் என சமாதானத்துக்குப் பின்னர் 24 போராளிகள் வரை நம் மண்ணில் விதைக்கப்பட்டுள்ளனர்.

சமாதானத்தை உலகுக்கும், எம் மக்களுக்கும் வெளிக்காட்டும் முகமாகவே இந்தப் பெறுமதிமிக்க தலைவர்களை இழந்தும் நாம் பொறுமையுடன் இருக்கின்றோம்.

தற்போது எமது தேசியத் தலைவரின் வலிகாட்டலினால் எம் கடற்படையை மேலும் வலுப்படுத்தியுள்ளோம். அரசாங்கமானது இந்த சமாதான உடன்படிக்கையை மீறுமானால் நாம் செய்த தியாகங்களுக்காக நிச்சயமாகப் பதிலடி கொடுத்துக் காவியம் படைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (12)

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் உப அலுவலகம் கொடிகாமத்தில் திறப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பிரதேசத்துக்கான பிரதேச செயலக உப அலுவலகம் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்தில் இயங்குகிறது.

தினமும் இந்தப் பிரதேச மக்களுக்கான சேவைகளை இந்தப் பிரதேச செயலகம் தொடர்ந்தும் நடாத்த விருப்பதாகத் தெரியவருகிறது. இதுவரைகாலமும் தெனமராட்சிப் பிரதேசத்துக்கென ஒரு பிரதேச செயலகமே இயங்கிவந்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் தொகை அதிகமாகக் காணப்பட்டதால் பிரதேச செயலக நடவடிக்கைகள் தாமதமாகவே நடைபெற்றுவந்தன. இதனால் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கொடிகாமப் பகுதி மக்களுக்குத் தனியான உப பிரதேச செயலகம் அமைக்கப்பட்டு செயலகப் பணிகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டு பிரதேச செயலகங்களாக வைத்திருப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாகவும் இது அமைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

# உடுவில் நூல்நிலையத்தின் நூலக அபிவிருத்திக் கூட்டம்

(உடுவில்)

வலிதெற்கு பிரதேச சபைக்குட்பட்ட உடுவில் நூல் நிலையத்தின் நூலக அபிவிருத்திக் குழுக்கூட்டம் கடந்த புதன்கிழமை பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் பங்குபற்றிய நூலக அபிவிருத்தி ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், நூலகத்தில் சிறுவர் பிரிவு ஆரம்பித்தல், நூலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை தெரியப்படுத்தல், நூலகத்துக்கான நூல்கள் கொள்வனவுசெய்யும்போது, வாசகர்வட்ட அங்கத்தவர்களின் கருததுக்களைப் பெறல், பிரதேச சபை மலர் ஒன்று வெளியிடப்படல், தற்பொழுது நூலகத்தில் உள்ள இடப்பற்றாக்குறையை உடன் நிவர்த்தி செய்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதற்குப் பிரதேச செயலர் பதிலளிக்கும்போது -

சிறுவர் நூலகப் பிரிவு ஆரம்பிக்க உடன் நடவடிக்கை மேற்கொள்வதாகவும், இதற்கு வேண்டிய தளபாட வசதிகள் ஏற்படுத்தப்பட்டதும் இந்தப் பிரிவு நூலகத்தின் ஒரு பகுதியில் குறிப்பிட்ட நேரத்தில் செயற்படும் எனவும், நூலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிதெற்குப் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கு நேரில்சென்று, மாணவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவம்பற்றி அறிவூட்டுவதெனவும், நூலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி. தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட ஒவ்வொரு குடும்பத்த வரும் சிறுவர் கலைக்களஞ்சியம், நுண்கலைக்கான புத்தகக் கலைக களஞ்சியம் போன்ற தரமான நூல்களை அன்பளிப்பாகக் கொடுத்து உதவவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் நூல்கள் கொள்வனவின்போது அங்கத்தவர்களின் எதிர்பாப்புக் கட்டாயம் நிறைவேற்றப்படும் எனவும், கட்டட இடநெருக்கடி பெரும்பாலும் ஜனவரி மாதமளவில் தீர்க்கப்படுமெனவும் தெரிவித்தார். பிரதேச மலர் வெளியிடுதல் சம்பந்தமான பலரின் ஆலோசனை பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

# பொலிஸார் விபரத்தைச் சமர்ப்பிக்க வழக்கின் காலக்கெடு நீடிப்பு

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடந்த மாதம் 27 ஆம் திகதி பணியாற்றிய பொலிஸ் அதிகாரிகளின் விபரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வழங்கப்பட்ட கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பில் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர் என்பதால், குறித்த தினத்தில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில பணியில் இருந்த பொலிஸாரின் விபரங்களை நேற்று நீதிமன்றுக்குச் சமர்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

எனினும், நேற்றையதினம் யாழ்.குடாநாட்டுக்குப் பொலிஸ் மா அதிபர் வருகைதந்ததன் காரணமாக, பொலிஸார் சிறப்புச்சேவையில் ஈடுபட்டதால் எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றுக்கு இந்த விபரங்களை சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

# றுகுணு பல்கலை மாணவர் குழு யாழ்.பல்கலைக்கழகத்துக்கு விஜயம்

றுகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமூகவியல் கற்கைநெறி மாணவர்கள் 50 பேர் அடங்கிய குழுவொன்று, யாழ்.பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்தது.

இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் எஸ். சிவகரன மற்றும் மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், வேறு பீடங்களின் மாணவர் ஒன்றியத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்துக் சுமார் 3 மணிநேரம் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது றுகுணு பல்கலைக்கழக மாணவர்களும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் தற்கால அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகவும், தமக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடினர்.

கடந்த 16 ஆம் திகதி ஏ-9 தரைவழிப்பாதை ஊடாக யாழ்.வந்த குழுவினர் தொடர்ந்து 3 நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று பல உயர்கல்வி நிலையங்களுக்கும் செல்லவுள்ளனர்.

### வாணி விழா

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினர் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வாணி விழாவைக் கொண்டாடவுள்ளனர். பருத்தித்துறை பிரதேச செயலகத்தில், பருத்தித்துறை பிரதேச செயலர் வசந்தகுமார் தலைமையில விசேட பூசைகள், ஆராதனைகள் என்பன நடைபெறவுள்ளன. (14)

# அரசின் சலுகைகளை எதிர்பாராமல் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுங்கள்

## தொழிற்துறைத் திணைக்கள உதவியாளர் ராகவன்

அரசால் வழங்கப்படும் இலவச மருத்துவம், கல்வி, நிவாரணம் சீருடை போன்றவற்றை எதிர்பார்த்து எமது மக்கள் தமது சொந்தக்காலில் நிற்பதை மறந்துவிட்டார்கள். சுயமாக வருமானம்தரும் தொழிலைச்செய்து வாழ்க்கையை வளம்பெறச் செய்ய வேணடும். சுயதொழில்மூலம் வருமானத்தைப் பெறுவதற்குக் கிராம மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டதே இந்தப் பயிற்சிநெறியாகும் என யாழ்.மாவட்ட தொழிற்துறைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் பி.ராகவன் தெரிவித்தார்.

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் பண்ணாகம் கிராமத்தில் அண்மையில் நடமாடும் மட்கலப் பயிற்சிநெறியை ஆரம்பித்துவைக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தனது உரையில்-

எமது திணைக்களத்தின் நடமாடும் சிறுகைத்தொழில் பயிற்சி அடிப்படையின்கீழ் இன்று இந்தப் பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சியை ஒழுங்காகப்பயின்று, சுயமாக வருமானத்தைத் தேடமுற்படுங்கள். இந்த மட்கலப் பொருட்களுக்கு உளளூர்ச் சந்தையில் அமோகமான வரவேற்புக் கிடைத்துவருகின்றது. எனவே, ஊக்கத்துடனும், அக்கறையுடனும் இந்தப் பயிற்சியில் பங்குபற்றி உங்கள் எதிர்காலத்தை முன்னேற்றவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வலிமேற்கு உதவிப் பிரதேச செயலர் ய.பரந்தாமன் தனதுரையில் -

இந்தப பயிற்சிநெறியைப் பொழுதுபோக்காக எண்ணக்கூடாது. அரசாங்கம் எல்லாவற்யையும் எமக்குத் தரும் என்று எதிர்பார்க்கக்கூடாது. நிவாரணத்தை நம்பி இங்குள்ளோர் வாழ்கின்றார்கள். இந்தநிலை மாறவேண்டும். நாமே எம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும். சொந்தக்காலில் நிற்கக்கூடிய ஒரு பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

ஜப்பான் நாடு கடல் வளத்தைத் தவிர, வேறு வளங்கள் எதுவும் இல்லாத நாடு. ஆனால், இன்று எத்தனையோ நாடுகளுக்குக் கடன் உதவி செய்யக்கூடிய நாடாகத் திகழ்கின்றது. இது அவர்களின் சுயதொழில் முயற்சியின் பலனாகும். 1960 ஆம் ஆண்டு சிங்கப்பூ சுதந்திரம் அடைந்தபோது, நம் நாட்டைப்போல் அபிவிருத்தி அடையாத ஒரு நாடாக, பொருளாதார வளம் குன்றிய நாடாக இருந்தது. இன்று அந்தநாட்டின் பொருளாதாரம் மேன்மை அடைந்த நிலையை எட்டியுள்ளது. இதற்கு நாம் எமது வளங்களைப் பிரயோகிக்கவேண்டும். அப்படியான வளங்களில் மரவேலை, மட்கலவேலை, நெசவு, பிரம்பு போன்ற மூலப்பொருட்களைக்கொண்டு சிறுகைததொழில் வளத்தைப் பெருக்க வேண்டும். இதனடிப்படையிலேதான் நடமாடும் மட்கலப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மட்கலப் பயிற்சியை, சங்கானை அரச மட்கலத் தொழிற்துறைப் போதனாசிரியர்கள் அ.திருச்செல்வம், எஸ்.தவராசா ஆகியோர் பயிற்சியாளர்களுக்குச் செய்து காண்பித்தனர்.

இந்தப் பயிற்சியை வழங்கிய போதனாசிரியர் அ்.திருச்செல்வம் தனதுரையில் -

சங்கானையில் அமைந்துள்ள அரச மட்கல நிலையத்தில் மண்ணால் உருவாக்கப்பட்ட பல பொருட்கள் செய்யப்படுகின்றன. இந்தப் பொருட்களுக்கு உள்ளூர் சந்தையிலே அதிக கிராக்கி உள்ளது. அண்மையில் நல்லூர் திருவிழாக் காலங்களில் எம்மால் இந்த அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதமான பொருட்களை மக்கள் விரும்பி வாங்கிச்சென்றார்கள். எனவே, இந்தப் பயிற்சியின்மூலம் பெறும் அனுபவத்தைக்கொண்டு நீங்களும் இந்த வகையான பொருட்களை உற்பத்தி செய்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்றார்.

இந்த நிகழ்வில் பண்ணாகம் கிராம உத்தியோகத்தர் திருமதி திலகவதியும், வலிமேற்கு பிரதேச தையல் போதனாசிரியர் செ.கிறிஸ்டினும் கலந்துகொண்டனர். (48)

# சின்னஞ்சிறு செய்திகள்

### பரிசளிப்பு விழா

(நல்லூர்)

நியந்த்ரீ அனுசரணையுடன் வழங்கும், பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள் மூன்றாமாண்டு நினைவுப் பேருரையும், நூல் அறிமுக விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 2.30 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் பேராசிரியர் கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

### கைதடி பாலத்தில் வெடிபொருட்கள் அகற்றல்

கண்டிவீதியில் உள்ள கைதடிப் பாலப் பகுதியில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோது, அந்தப்பாலத்தின் கீழ்ப் பகுதியில் வெடிபொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டு, மிதிவெடி அகற்றும் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டு அதன் மூலம் வெடிபொருட்கள் அகற்றப்பட்டன. (29)

### மண்டபம் திறப்பு விழா

பருத்தித்துறை சாயி மந்திர் புதிய மணடபத் திறப்புவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. புதிய மண்டபத்தை அகில இலங்கை ஸ்ரீ சத்தியசாயி நிலையங்களின் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ எம்.வன்னியசேகரம் வைபவரீதியாகத் திறந்துவைக்கவுள்ளார்.

### சைவபரிபாலன பரீட்சை நவம்பரில்

சைவ பரிபாலன சபையினரால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டுவரும் சைவநெறித் தேர்வு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புத்தளம், கண்டி ஆகிய இடங்களில் அமையவுள்ள 470 பரீட்சை நிலையங்களில் சுமார் 85 ஆயிரம் பரீட்சாத்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

# சண்டிலிப்பாய் ஐயனார் வீதியில் திருட்டு மின்பெறுவோர் அதிகரிப்பு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பகுதியில் அண்மைக்காலமாகத் திருட்டு மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சண்டிலிப்பாய் ஐயனார் கோவில் பகுதியிலுள்ள மின் கம்பங்களில் திருட்டுத்தனமாக வயர்களை இணைத்து மின்சாரம் பெற்றுவருகின்றனர்.

இவ்வாறு திருட்டுத்தனமாக மின்சாரம் பெறுவோர், ஏனையோரின் காணிகளுக்கூடாக வயர்களை இணைககின்றார்கள். இதனால் அந்தக் காணிகளிலுள்ள குடியிருப்பாளர்கள் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மழைக்காலத்தில் இவ்வாறான திருட்டு மின்சாரம் பெறுவது ஆபத்தானதாகையால் சம்பந்தப்பட்டோர் இதனைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (44)

### வாணி விழா

எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்.கச்சேரியின் பொதுமண்டபப் பகுதியில் வாணிவிழா இடம்பெறவுள்ளது. இதில் பல இந்துமதப் பெரியார்கள், அரச அதிபர் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வின் இறுதியில் பல சமய நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# க.பொ.த சாதாரண தரம் மாதிரிப் பரீட்சை -2004 விஞ்ஞானம்

I ஆவர்த்தன அட்டவணையில் உள்ள அடுத்தடுத்த ஆவர்த்தன மூலகங்களின் உருகு நிலை வரைபு படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1) ஒரே கூட்ட மூலகங்கள் எவை?
2) மூலகம் G அடங்கும் கூட்டத்தின் சிறப்பியல்புகள் மூன்று தருக?
3) C யும் F உம் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் மூலக்கூற்றுச் சூத்திரத்தைத் தருக? பிணைப்பின் வகை யாது? இப் பிணைப்பின் இயல்புகள் 2 தருக?
4) C யும் F உம் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் புள்ளி ( . ), தர (X) வடிவைத் தருக?
5) A ஆனது ஐதான HCl உடன் புரியும் தாக்கத்தை தருக?
6) பின்வரும் சொற்சமன்பாடுகளுக்கு ஈடுசெய்யப்பட்ட இரசாயனச் சமன்பாடுகள் தருக.
   a) மக்னீசியம் + சல்பூரிக்கமிலம் ⟶ மக்னீசியம் சல்பேற் + ஐதரசன்
   b) கல்சியம் காபனேற் ⟶ கல்சியம் ஒட்சைட் + காபனீரொட்சைட்
   c) அலுமினியம்+ சல்பூரிக்கமிலம் ⟶ அலுமினியம் சல்பேற் + ஐதரசன்
   d) பொட்டாசியம் பரமங்கனேற் ⟶ பொட்டாசியம்மங்கனேற் + மங்கனீரொட்சைட் + ஒட்சிசன்
   e) சோடியம் இருகாபனேற் ⟶ சோடியம்காபனேற் + நீர் + காபனீரொட்சைட்

II ஒளிக்கதிர்கள் ஆடியில் பட்டுத் தெறிப்பதைப் போல வில்லைகளில் முறிவடைகின்றன.
1) ஒருங்கு வில்லை ஒன்றில் முதலச்சுக்கு அண்மையாகவும், சமாந்தரமாகவும் வரும் ஒளிக்கதிர்கள் வில்லையில் பட்டு முறிவடைவதைக் காட்டும் கதிர்ப்படம் வரைக?
2) பின்வரும் கதிர்ப்படங்களைப் பூர்த்தி செய்க.




3) பின்வரும் விம்பங்களைப் பெற எத்தகைய ஆடி பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையும், பொருள் எங்கே வைக்கப்பட வேண்டும் என்பதையும் தருக?
   a) வளைவு மையத்தில் பொருளளவு விம்பம்
   b) உருப்பெருத்த நிமிர்ந்த விம்பம்
4) அரியத்தினூடாக வெள்ளொளி செல்லும்போது ஏற்படும் நிறப்பிரிகையைக் காட்ட கதிர்ப்படம் வரைக?
5)




   a) வீச்சம் யாது?
   b) அலைநீளம் யாது?
   c) மீடிறன் 256 Hz ஆயின் இவ் ஒலியின் வேகம் யாது?
6) பரிவு என்றால் என்ன?
7) பரிவு நடைபெறும் சந்தர்ப்பங்கள் எவை?
   கழி ஒலி பயன்படும் சந்தர்ப்பங்கள் எவை?

III திரவங்களில் சில பொருட்கள் அமிழலாம், சில பொருட்கள் மிதக்கலாம்.
1) ஒரு கல்லின் நிறை 20Kg ஆகும். அக்கல்லை முற்றாக நீரினுள் அமிழ்த்தியபடி நிறையை நிறுத்தால் நிறை வேறுபடுமா? காரணம் தருக?
2) மேற்கூறிய செயன்முறையின்போது 2Kg நீர் வெளியேறியது எனின் இதிலிருந்து நீர் பெறும் முடிவு யாது?
3) இதனை முதலில் அறிந்த விஞ்ஞானி யார்? அவர் கூறிய விதியைத் தருக?
4) அடர்த்தி என்னும் பதத்தை விளக்குக? அதன் அலகு யாது?
5) அமுக்கம் குறைக்கப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?
6) திரவத்தினுள் உள்ள யாதேனும் ஒரு புள்ளியில் நிலவும் அமுக்கமானது எக்காரணிகளில் தங்கியுள்ளது?
7) ஒரே திரவமட்டத்தில் அமுக்கம் சமன் என்பதை எவ்வாறு அறியலாம்?




IV இப்பரிசோதனையானது ஒளித்தொகுப்பிற்குத் தேவையான காரணிகளை இனங் காணச் செய்யப்பட்டுள்ளது.
1) ஒளித்தொகுப்பின் எக்காரணியை இனங்காண இப்பரிசோதனை உதவுகிறது?
2) இப்பரிசோதனை செய்யமுதல் தாவர இலை 48 மணிநேரம் இருட்டில் வைக்கக் காரணம் யாது?
3) மாப்பொருள் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக?
4) ஒளித்தொகுப்புத் தாக்க சமன்பாட்டைத் தருக?
5) ஒளித்தொகுப்புச் செயன்முறையானது உயிரினங்களின் நிலவுகைக்கு இன்றியமையாதது. இக்கூற்றை விளக்குக?
6) ஒளித்தொகுப்பினை வினைத்திறனாக மேற்கொள்ள தாவரங்களில் காணப்படும் இசைவாக்கங்கள் 2 தருக?
7) குளுக்கோசை இனம் காணும் முறையைத் தருக?

V இயற்கைச் சூழல் மாசடையாது பாதுகாத்தல் எமது கடமை




1) அருகிலுள்ள அமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
2) A எவ்வாறு அழைக்கப்படுகிறது? A யின் முக்கியத்துவம் யாது?
3) அருகிலுள்ள அமைப்பின் கோலத்திலிருந்து நாம் கூறக்கூடிய விடயங்கள் 2 தருக?
4) பிரிகையாக்கிகள் எவை? அவற்றின் தொழிற்பாடு யாது?
5) அருகிலுள்ள அமைப்பிற்குரிய உணவுச்சங்கிலி ஒன்றினை அமைக்க?
6) காட்டில் பட்டினியால் இறப்பதற்கு கூடிய சாத்தியக்கூறு புலிக்கே உரித்தானது முயலுக்கல்ல விளக்குக?
(7) நைதரசன் வட்டச் செயன்முறையை விபரிக்க!

VI ஒரு இனம் அழிவடையாது பாதுகாக்க இனப்பெருக்கம் அவசியமாகும்.
(1) தாவர இனப்பெருக்க முறைகள் 2 தருக?
(2) கன்னி கனியமாதல் என்றால் என்ன?
(3) முளைவகை மூலம் இனப்பெருக்கமடையும் தாவரங்கள் 2 தருக?
(4) வித்து முளைக்கும்போது விடுவிக்கப்படுபவை எவை?
(5) இவற்றில் ஒன்று வெளியிடுவதைக் காட்ட இலகுவான பரிசோதனை ஒன்று தருக?
(6) ஒரு பூவின் நெடுக்குவெட்டு மரத்தை வரைந்து அதன் பகுதிகளைக் குறிக்க?
(7) காற்றால் பரம்பலடையும் வித்துக்கள் கொண்டுள்ள இசைவாக்கங்கள் 4 தருக?

VII பின்வருவனவற்றுள் ஐந்திற்கு விஞ்ஞானரீதியான விளக்கம் தருக?
1) மரக்குற்றியொன்றைவிட துண்டுகளாக்கப்பட்ட விறகுக்கு தீமூட்டுவது இலகு
2) மலையொன்றில் ஏறும்போது அல்லது இறங்கும்போதும் செவிகள் அடைத்திருக்கும்
3) நிறக்குருட்டு நோயைக் கொண்டிராத பெற்றோருக்கு பிறக்கும் பிள்ளைகள் நிறக் குருட்டுத் தன்மையைக் கொண்டவர்களாக இருக்கலாம்.
4) விவசாய நிலத்துப் பயிர்ச்செய்கைக்கு முன் சணல் பயிரிடுவது சிறந்தது.
5) ஆரம்பத்தில் டிடிரி மருந்தால் கொல்லப்பட்ட நுளம்புகள் தற்போது அம்மருந்துக்கு இறப்பதில்லை.
6) மலைநாட்டில் வசிப்பவர்களுக்கு கண்டக்கழலை நோய் அதிகம் காணப்படும்.

VIII விளையாட்டுக் கார் ஒன்றின் இயக்கத்திற்கான வேகநேர வரைபு அருகில் தரப்பட்டுள்ளது.




1) வேகம் என்பதை வரையறுக்க?
2) வாகனத்தின் ஆரம்ப வேகம் யாது?
3) ஆர்முடுகல் யாது?
4) யுடீ யில் வாகனம் எவ்வளவு தூரம் இயங்கியது?
5) வாகனம் இயங்கிய மொத்ததூரம் யாது?
6) வாகனத்தின் சராசரிக்கதி யாது?
7) வாகனத்தின் திணிவு 100g எனின் இறுதிப் பத்துச் செக்கனில் அதில் செயற்பட்ட விளையுள் விசை யாது?

---

1. வெப்பசக்தியை அளக்கும் அலகு
   (1) $^0c$ (2) $^0f$ (3) J (4) K
2. பொலிஸ்ரைரீன் (Rigifoam) இன் குறியீடு




3. கொள்ளளவி ஒன்றின் கொள்ளளவும் பின்வரும் எக்காரணிகளில் தங்கியுள்ளது?
   A. தகடுகளின் பரப்பளவு B. தகடுகளுக்கு இடையிலான தூரம்
   C. மின்னுழையத்தின் தன்மை D. தகடுகளின் அடர்த்தி
   (1) A,B,C (2) A,C,D (3) B,C,D (4) A,B,C,D
4. அங்கிகளின் சிறப்பான பண்புகளைத் தீர்மானிக்கும் அலகுகள் காணப்படுவது
   (1) இழைமணி (2) நிறமூர்த்தம் (3) முதலுரு (4) கலச்சவ்வு
5. குருதியில் குளுக்கோஸ் மட்டத்தை மாறாது பேணுவது
   (1) இன்சுலின் (2) தைரொட்சின் (3) அதிரீனலின் (4) S.T.H
6. லேசர் கதிரானது சாதாரண ஒளியிலிருந்து எவ்வியல்பில் வேறுபடும்?
   (1) ஒரே அலை நீளத்தையும் ஒரே நிறத்தையும் கொண்டது.
   (2) ஒரே திசையில் பயணம் செய்யும், பரவலடையும்.
   (3) அதிகளவு சக்தியைக் காவிச் செல்லாது.
   (4) மேற்கூறிய யாவும்.
7. எளிய மின்கலத்தின் அனோட்டில் நடைபெறும் தாக்கத்தைத் தருவது
   (1) $H + H \longrightarrow H_2$ (2) $Zn \longrightarrow Zn^{2+} + 2e$
   (3) $H_2SO_4 \rightleftharpoons 2H^+ + SO4^{2-}$ (4) $H_2O \longrightarrow H^4 + OH^-$
8. இதயத்துடிப்பின் வீதத்தைக் கட்டுப்படுத்தும் இதயமுடுக்கி காணப்படுவது
   (1) முற்பெருநாளம் திறக்கும் இடத்துக்கு அருகில்
   (2) சுவாசநாளம் திறக்கும் இடத்துக்கு அருகில்
   (3) பிற்பெருநாளம் திறக்கும் இடத்துக்கு அருகில்
   (4) ஈரல்வாயிநாளம் திறக்குமிடத்தில்.
9. ஈரில்லத் தாவரத்துக்கு உதாரணமாக அமைவது
   (1) தென்னை (2) பனை (3) பூசணி (4) பாகல்
10. இலங்கையின் கரையோரப் பகுதிகளில் சில இடங்களில் கருநிற மணல் காணப்படுகிறது. இந்தக் கருநிற மணலின் பிரதான கூறு
   (1) உருற்றைப் (2) இல்மனைற் (3) மொனசைட் (4) சேர்க்கோன்
11. தாவர இனப்பெருக்கத்தின்போது நடைபெறும் சில தொழிற்பாடுகள் தரப்பட்டுள்ளன.
   a. மகரந்தக் குழாய் சூலகத்தை நோக்கி வளர்தல்.
   b. மகரந்த மணிகள் குறியின் மீது விழல்.
   c. குறியின் மீது மகரந்த மணிகள் முளைத்தல்.
   d. மகரந்தக் கருக்களும், சூலின் கருக்களும் இணைதல்.
   (1) a,b,c,d, (2) d,c,b,a (3) b,c,a,d (4) c,b,a,d
12. உயிர்க்கோள ஒழுங்கமைப்பு மட்டம் வருமாறு
   தனியன் ⟶ இனம் ⟶ [X] ⟶ சாகியம் ⟶ [Y] ⟶ உயிர்க்கோளம்
   X, Y இல் இடம்பெற வேண்டியவை
   (1) குடித்தொகை, சூழற்தொகுதி (2) இழையம், தொகுதி
   (3) சூழற்தொகுதி, குடித்தொகை (4) தொகுதி, இழையம்
13. மின் தடை பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் பிழையானது
   (1) கம்பியின் நீளம் அதிகரிக்கும்போது அதன் தடையும் அதிகரிக்கும்.
   (2) செய்யப்பட்டுள்ள திரவியத்தின் வகைக்கேற்ப கம்பியின் தடை மாறும்.
   (3) கம்பியின் தடையில் வெப்பநிலையின் செல்வாக்கு இல்லை.
   (4) கம்பி மெல்லியதாக இருக்கும்போது அதன் தடையும் அதிகரிக்கும்.
14. உயிர் இரசாயன ஊக்கிக்கு உதாரணம்
   (1) இரும்பு (2) மெதேன் (3) இலிப்பேசு (4) அமோனியா

15. இறப்பர் பால் திரட்சி அடைவதைத் தடுப்பதற்கு பிரயோகிக்கப்படும் திரட்சி நிரோதி அல்லாதது
(1) அமோனியா கரைசல் (2) சோடியம் சல்பைற்று
(3) போமிக்கமிலம் (4) சோடியங் காபனேற்று

16. பொக்சைற்று, ஏமற்றைற்று என்பவற்றிலிருந்து பெறப்படும் உலோகங்கள் முறையே
(1) Fe,Al (2) Al,Fe (3)Zn, Pb (4)Pb, Zn

17. இறப்பர் மரத்தில் அதிகளவு பாற்கலங்கள் காணப்படும் பகுதி
(1) வன் மரவுரி (2)மென் வரவுரி (3) மாறிழையம் (4)காழ்

18. கண் பரிசோதனை மருத்துவர் வழங்கிய மருத்துவச் சிட்டை வருமாறு
R L
+2.5 +2.5 இந்தச் சிட்டை தொடர்பான சரியான கூற்று
(1) இவர் கிட்டப்பார்வை குறைபாடுடையவர்
(2) இதன் குவியத்தூரம் 2.5 cm ஆகும்.
(3) குவிவு வில்லை பயன்படுத்தப்படும்.
(4) இதன் வலு 40 D ஆகும்.

19, 20 ஆம் வினாக்களுக்கு பின்வரும் அலைவடிவத்தைப் பயன்படுத்துக.




19. அலையின் அலைநீளமும், வீச்சமும் முறையே
(1) 40cm, 5 cm (2) 60cm, 10cm (3) 20cm, 5cm (4) 40cm, 20cm

20. 800 Hz அதிர்வெண் உடைய இசைக்கலவையை இசைத்தபோது மேற்படி அலை பெறப்பட்டிருப்பின் அதன் வேகம்
(1) $330ms^{-1}$ (2)$320ms^{-1}$ (3)$32000ms^{-1}$ (4)$3300ms^{-1}$

21. பின்வருவனவற்றுள் பங்கீட்டுவலுப் பிணைப்பைக் கொண்டது
(1)NaCl (2)KCl (3)HCl (4)NgCl

22. திரவம் ஒன்றினுள்ளே இருக்கும் புள்ளி ஒன்றில் உள்ள அமுக்கத்தில் செல்வாக்குச் செலுத்தாத காரணி
(1) திரவத்தின் அடர்த்தி (2) திரவத்தின் கனவளவு
(3) ஈர்வையினாலான ஆர்முடுகல் (4) சுயாதீனப் பரப்பிலிருந்து அப்புள்ளியின் ஆழம்

23. இறப்பர் மரத்தின் விஞ்ஞானப் பெயரைச் சரியாகத் தருவது
(1) HAVER BRASILIENSIS (2) havea brasiliensis
(3) Havea brasiliensis (4) Havea Brasiliensis

24. பின்வரும் காபனேற்றுக்களில் வெப்பப் பிரிகையடையக் கூடிய காபனேற்று
(1) $Li_2CO_3$ (2)$K_2CO_3$ (3)$Na_2CO_3$ (4)$BeCO_3$

25. மனித உடலின் கபச்சுரப்பி பற்றிய சரியான கூற்று
a. கபச்சுரப்பி கழுத்துப் பகுதியில் காணப்படும்.
b. அதிரீனல் சுரப்பி சிறுநீரகங்களின் மேல் காணப்படும்.
c. சதையியில் இலங்ககான் சிறுதீவுகள் உண்டு.
d. விதைகள் ஈஸ்ரஜன் ஓமோனை அரிக்கும்.

26. 8 m ஆழமுள்ள குளமொன்றின் அடியிலிருக்கும் மீன் ஒன்று அனுபவிக்கும் மேலதிக அமுக்கமானது (நீரின் அடர்த்தி $1000kgm^{-2}$) $Nm^{-2}$ இல்
(1) $\frac{8 \times 1000}{10}$ (2) $\frac{10 \times 1000}{8}$ (3) $\frac{8 \times 10}{1000}$ (4) $8 \times 1000 \times 10$

27. சூழல் எண் கூம்பகத்தின் இரண்டாம் போசணை மட்டத்தால் வகைக்குறிக்கப்படுவது?
(1) தாவரவுண்ணிகளின் எண்ணிக்கை (2) உற்பத்தி செய்யும் அங்கிகள் எல்லாம
(3) ஊனுண்ணிகளின் எண்ணிக்கை (4) அனைத்துமுண்ணிகளின் எண்ணிக்கை

28. உலர் மின்கலத்தைப் பயன்படுத்தி மின்குமிழை ஒளிரச் செய்யும்போது நடைபெறும் சக்தி மாற்றம்
(1) மின்சக்தி → இரசாயனச் சக்தி → ஒளிச்சக்தி
(2) இரசாயனச்சக்தி → மின்சக்தி → ஒளிச்சக்தி
(3) இரசாயனச்சக்தி → மின்சக்தி → ஒளிச்சக்தி
(4) மின்சக்தி → வெப்பசக்தி

29. பின்வரும் கதிர்ப்படங்களில் சரியானது
(1) (2) (3) (4)




30. இறப்பர் பாலில் உள்ள மஞ்சள் கறையை நீக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்
(1) சோடியம் காபனேற்று (2) சோடியம் இருசல்பைற்று
(3) அமோனியா கரைசல் (4) சோடியம் சல்பைற்று

31. தென்னைமரம் ஒன்றில் இருந்து தேங்காய் ஒன்று கீழ்நோக்கி விழும்போது தேங்காயின் இயக்கசக்தி (KE) நேரத்துடன் மாறும் வரைபை சரியாயக் குறிப்பது.
(1) (2) (3) (4)




32. மேலுள்ள விடைகளில் ஓமின் விதிப் பரிசோதனையின்போது பெறப்பட்ட முடிவுகட்கு அமைய மின்னழுத்த (V) எதிர் மின்னோட்ட (I) வரைபாக அமையக்கூடியது?
(1) a (2) b (3) c (4) d

33. இதயத்துடிப்பு, சுவாச வீதத்தை ஆளும் மையம்
(1) மூளையம் (2) மூளி (3) நீள்வளையமையவிழையம் (4)முண்ணான்

34. ஒளி உணரித் தடையியின் சரியான குறியீடு
(1) (2) (3) (4)



35. மேலே தரப்பட்ட குறியீடுகளில் PnP திரான்சிஸ்ரறைச் சரியாகக் குறிப்பது
(1) 1 (2) 2 (3) 3 (4) 4

36. 116 g $C_4H_{10}$ பூரணமாக தகனத்துக்கு உட்பட்டால் வளியுடன் சேரும் காபனீரொட்சைட்டின் திணிவு (C - 12, H - 1 , O - 16)
(1) 3.69g (2) 11.6 g (3) 35.2 g (4) 176g

37. X எனும் மூலகத்தின் ஒட்சைட்டின் சூத்திரம் $X_2O_3$ ஆயின் X எனும் மூலகத்தின் சல்பேற்றின் சூத்திரம்
(1) $XSO_4$ (2)$X_2SO_4$ (3) $X_2(SO_4)^3$ (4) $X_3(SO_4)^2$

38.




கோலொன்றில் 2000n விசை தொழிற்படுவதோடு வில்லொன்றில் கோல் சமநிலைப் படுத்தப்பட்டுள்ளது. P வில்லினால் வழங்கப்படும் விசை யாது?

(1) 60n (2) 600 n (3) 6000 n (4)6 n

சி.பாலச்சந்திரன்
வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம்

# வணிகக்கல்வியும் கணக்கீடும்

திருமதி கதிரேசபிள்ளை

## பகுதி I

01.
(1) உற்பத்தி தொழிற்பாட்டை பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் காட்டுக
(2) வியாபாரியின் நடத்தையினால் சமுதாயத்திற்கு ஏற்படும் இரண்டு நடத்தைகளை குறிப்பிடுக.
(3) விஞ்ஞான தொழில்நுட்ப சூழலினால் பல வணிகச் சந்தர்ப்பங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்றைக் குறிப்பிட்டு விளக்குக.
(4) சிலலறை வியாபாரத்திற்கு மொத்த வியாபாரம் அவசியமாகும். 2 காரணங்களைக் குறிபபிடுக.
(5) தவணைக் கட்டண முறை விற்பனையின் இரு முறைகளையும் குறிப்பிடுக.
(6) சந்தை பற்றிய தகவல் பெறக்கூடிய மூலகங்கள் 4 குறிப்பிடுக.
(7) நுகர்வோர் உரிமைகள் 4 குறிப்பிடுக.
(8) வணிக நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள் 3 தருக.
(9) பெறுவோன் கணக்கு மட்டும் என்னும் குறுக்குக் கோடிடல் குறிக்கும் விளக்கம் யாது?
(10) வணிக வங்கியால் வழங்கப்படும் மேலதிகப்பற்று வசதி குறிப்பது யாது?

## பகுதி II

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

02.
(1) தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான தொடர்பையும் அவற்றுககிடையிலான வேறுபாட்டையும் தெளிவுபடுத்துக.
(2) வணிக முயற்சியில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் அரச பொருளாதாரக்கொள்கை 2 குறிப்பிடுக.
(3) பணம் என்னும் கருவி தோன்றுவற்குக் காரணமாக அமைந்த காரணிகள் 4 குறிப்பிடுக.
(4) பொருட்களின் தரம் வியாபாரிகளுக்கும், நுகர்வோருக்கும் அனுகூலமானவை 2 குறிப்பிடுக.
(5) நுகர்வோர் செய்யும் செலவுகளை உதாரணம் மூலம் குறிப்பிடுக.

03.
(1) மத்திய வங்கியின் பிரதான நோக்கத்தைக் குறிப்பிடுக.
(2) அலகுப் பொறுப்பு முதலீட்டின் நன்மைகள் 2 குறிப்பிடுக.
(3) வணிகச் செயற்பாட்டிற்கு களஞ்சியப்படுத்தல் எவ்வாறு நன்மை பயக்கிறது?
(4) பின்வரும் காப்புறுதித் தத்துவங்களை விளக்குக.
(அ) உயர்ந்த நன்னம்பிக்கைத் தத்துவம்
(ஆ) பதிலாள் வைப்புத் தத்துவம்
(5) காலக் குத்தகை நடைமுறைப்படுத்தப்படும் இரு முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

04.
(1) முயற்சியாண்மை உருவாகுவதற்கு ஏதுவான காரணிகள் 4 குறிப்பிடுக.
(2) சர்வதேச வியாபாரம் உருவாகுவதற்கு காரணங்கள் 2 தருக.
(3) வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றின் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்யும் முதலீட்டாளர் எய்தும் இரண்டு நன்மைளைக் கூறுக.
(4) உரிமையாண்மையின் அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்திக் காட்டுக.

05. பின்வரும் மாதிரியமைப்பைப் பயன்படுத்தி 2004 யூன் மாதத்திற்கான சில்லறைக் காசேட்டைத் தயாரித்து 2004 யூலை 31 இல் சில்லறைக் காசேட்டைச் சமப்படுத்து மாறு நீர் கேட்கப்படுகின்றீர்.

| பெறுவனவுகள் | திகதி | விபரம் | கொடுப்பனவு ரூபா | பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அஞ்சல் செலவு | பிரயாணச் செலவு | எழுது கருவி | நானாவித செலவு |
| | | | | | | | |

| | | |
|---|---|---|
| யூலை 01 | கிடைக்கப் பெற்ற சிறுசெலவுக் காசுக் கட்டுநிதி | 1000 |
| யூலை 02 | செலுத்திய அஞ்சற்செலவுகள் | 60 |
| யூலை 03 | செலுத்திய பிரயாணச் செலவு | 100 |
| யூலை 04 | கொள்வனவு செய்த எழுதுகருவிகள் | 125 |
| யூலை 05 | செலுத்திய பிரயாணச்செலவு | 250 |
| யூலை 08 | செலுத்திய அஞ்சற்செலவு | 25 |
| யூலை 12 | கொள்வனவு செய்த காகிதாதிகள் | 50 |
| யூலை 13 | செலுத்திய அஞ்சற் செலவு | 75 |
| யூலை 20 | பிரயாணச் செலவு | 35 |
| யூலை 27 | காகிதாதி | 30 |
| யூலை 30 | பிரயாணச் செலவு | 100 |

06.
அ) உற்பத்திக் கணக்கு என்பதால் நீர் கருதுவது யாது?
ஆ) உற்பத்திக் கணக்கொன்றின் பிரதான கூறுகளைப் பெயரிடுக.
இ) பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி 2003 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான உற்பத்திக் கணக்கொன்றைத் தயாரிக்க.

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் இருப்பு | 01.01.2003 | 24500 |
| கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள் | | 287500 |
| மூலப்பொருள் இருப்பு | 31.12.2003 | 18300 |
| உட்சுமைக்கூலி மூலப்பொருள் | | 4000 |
| நேர்கூலிகள் | | 8000 |
| தொழிற்சாலைக்கூலிகள் | | 40000 |
| பொறித்தொகுதியின் தேய்மானம் | | 12500 |
| தொழிற்சாலைச் செலவுகள் | | 8000 |
| எரிபொருளும் சக்தியும் | | 24000 |

07.
(01) ராஜன் கம்பனியின் கணக்குப் பதிவாளராக நீ கடமையாற்றுகின்றீ எனக் கருதுக. 2002 டிசம்பரில் தயாரிக்கப்பட் பரீட்சை நிலுவையின் தொகைகள் ஒத்தவையாக இருந்த போதலும் பதிவு செய்தலின் போது சில வழுக்கள் ஏற்பட்டிருந்தன என கணக்காளர் எடுத்துக் காட்டினார். பதிவு செய்தலின் போது ஏற்பட்டிருக்கக் கூடிய நான்கு வகையான வழுக்களைக் கூறுக.
(02) 2003 டிசம்பர் 31 இல் பரீட்சை மீதி தயாரிக்கப்படுகையில் வரவுப்பக்கத்தின் கூட்டுத் தொகையானது செலவுப்பக்கத்தின் கூட்டுத்தொகையிலும் அதிகமாக இருந்தது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்வரும் வழுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.
(1) வெளித்திரும்பல் ஏட்டின் கூட்டுத்தொகை 850 வெளித்திரும்பல் கணக்கில் 580 ஆகப் பதிவுசெய்ப்பட்டிருந்தது.
(2) ரஞ்சன் என்பவரிடம் இருந்து கிடைத்த காசோலை காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்படடிருந்த போதும் ரஞ்சன் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது.
(3) பொறித்திருத்தம் 1500/- பொறிக்கணக்கில் பதியப்பட்டிருந்தது.
(4) கொடுத்த கழிவு 75/- பெற்றக் கழிவு கணக்கில் பதியப்பட்டிருந்தது.

08. பாலன் வணிகத்தினது காசேட்டில் வங்கிநிரல் 2003 டிசம்பர் 30 இல் இருந்தபடி ரூபா 5000 அனுகூலமான மீதியொன்றைக் காட்டியது. ஆனால் அத்தேதியில் இருந்தபடி வங்கியால் அனுப்பி வைக்கப்பட்ட வங்கிக்கூற்று மீதி வேறுபட்ட பெறுமதியைக் கொண்டிருந்தது. இவ்வேறுபாட்டிற்கான காரணங்களைப் பரிசீலித்த பொழுது பின்வரும் விபரங்கள் வெளிப்பட்டன.
1) வைப்புச் செய்யப்பட்ட ஆனால் இதுவரை சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் 15000 ரூபா
2) வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவிற்காக வங்கியிடம் இதுவரை சமர்ப்பிக்கப்படாதிருந்த காசோலைகள் 3000/-
3) வணிகத்தின் காசேட்டில் பின்வரும் விடயங்கள்பதியப்படாதிருந்தது.
வங்கிக் கட்டணம்
வாடிக்கையாளர்களினால் வங்கிக்குச் செலுத்தப்பட்ட நேரடியான வைப்புக்கள் 4000 நிலையான கட்டளையின் மீது வங்கியினால் கழிக்கப்பட்ட கடந்த தவணைக் கட்டணம் 2000 30.11.2003 இல் இருந்தபடியான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்குக.

# போக்குவரத்து வசதி இன்மையால் பள்ளமடு மக்கள் பெரும் சிரமம்!

(மன்னார்)

மன்னார் - பள்ளமடு கிராமத்தில் உள்ள 75 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்பட இந்தப்பகுதி மக்கள் போக்குவரத்து வசதி இன்மையால் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

பள்ளமடுக் கிராமத்திலிருந்து 75 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் 2 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள வித்தாதீவு பாடசாலைக்கே செல்கின்றனர். இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் கால்நடையாகவே சென்று கல்வி கற்கின்றார்கள். இவ்வாறு மாணவர்கள் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு நடந்தே சென்றுவருவதனால் அவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் பள்ளமடுவிற்கும், விடத்தல்தீவுக்கும் இடையிலான போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்தித் தரவேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட

# தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு!

முல்லைத்தீவு - பாண்டியன் குளம் பிரதேசத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு, பாண்டியன்குளம் மகா வித்தியாலய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் துணைச் செயலாளர் பொதுச் சுடரை ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான கனகரத்தினம், முல்லை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# கட்டாக்காலி கால்நடை பிடிக்கப்பட்டு அதற்குரிய குற்றப்பணம் அறவிடப்படும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், கடந்த 15 ஆம் திகதிமுதல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதிவரை கால்நடைகளை பகல்வேளையில் பராமரித்தும், இரவு வேளைகளில் பட்டியில் அடைத்தும் கட்டுபபடுத்துமாறு கால்நடை வளர்ப்போர் கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.

இந்தக் கால்நடைகள் பயிர்ச்செய்கை செய்யப்பட்ட பிரதேசங்களுக்குள் சென்று பயிரழிவுகளை ஏற்படுத்துமாயின் கால்நடைகள் பிடிக்கப்பட்டு குற்றப்பணம் அறவிடப்படும் என முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் செய்திக்குறிப்பொன்று தெரிவித்துள்ளது.

# பூநகரி - நல்லூர் மகாவித்தியாலயத்தின் இரண்டு மாடிக் கட்டடத் திறப்புவிழா இன்று!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் நிகொட்டின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இரு மாடிக் கட்டடத் திறப்புவிழா இன்று காலை 11 மணிக்கு பாடசாலை முதல்வர் நா.கணேஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்புவிருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், தமிழீழ துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ கல்விக் கழகத் துணைப்பொறுபாளர் க.அருண் மாஸ்ரர் பூநகரி பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் கிளிநொச்சி நிகொட் பிரதித் திட்டப்பணிப்பாளர் க.பார்த்தீபன், பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் பிரதான மண்டபத்தையும், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் விஞ்ஞான ஆய்வுகூடத்தையும் திறந்துவைக்கவுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலர் மா. சிறிஸ்கந்தகுமார் செயற்பாட்டறைக் கட்டடத்தையும், தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் க.அருண் மாஸ்ரர் மாடிக்கட்டடத்தையும், கிளிநொச்சி நிகொட் நிறுவன பிரதித் திட்டப் பணிப்பாளர் க.பார்த்தீபன் வகுப்பறையையும் திறந்து வைக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவி குலசிங்கம் புனிதவதியின் ஞாபகார்த்தமாக விருந்துபசார நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

## மாவீரர் நாளையொட்டி சிரமதானப் பணிகள்

(கிளிநொச்சி)

துணுக்காய் - ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாளையொட்டி மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களால் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை துணுக்காய் பிரதேசத்தில் மாவீரர் நாளையொட்டி பல கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றது.

இக்கலந்துரையாடல்கள் துணுக்காய் அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் இரண்டாம் கட்ட சமூக நலப்பயிற்சி நெறி!

(கிளிநொச்சி)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கல்வித்திணைக்களத்துடன் இணைந்து சுகாதாரத் திணைக்களத்தினூடாக, ஏ.எஸ்.பி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படும் சமூக நலப்பயிற்சி நெறியின் முதற் கட்டம் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 2 ஆம் கட்ட சமூக நலப்பயிற்சி நெறி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு நடத்தும் அடிப்படையில் கடந்த 16, 17 ஆம் திகதி இரு நாட்களும் கிளிநொச்சி கல்விவலயத்தில் கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம், கிளிநொச்சி பாரதி வித்தியாலயம் ஆகியவற்றில் சிறப்பாக நடத்தப்பட்டன.

இந்தப் பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும் கலந்துகொண்டனர்.

மேலும் இந்தப் பயிற்சி நெறியில் முதலுதவி, உடல் அமைப்புத் தொழிற்பாடு, முதலுதவிச் செய்முறைகள், தொற்றுநோய்கள், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல விரிவுரைகள் சென்ஜோன்ஸ் அம்புலனஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், தலைவர், தொண்டர்கள் ஆகியோராலும், சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சி நெறியில் முதலுதவி தொடர்பான கைநூல், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவால் தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பங்குபற்றிய ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சியை நிறைவு செய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும், அதற்கான மருந்துகள், உபகரணங்களும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவால் இத்திட்டத்தில் வழங்கப்பட்டதோடு, ஒவ்வொரு பாடசாலைகளிலும் பயிற்சிநெறியை நிறைவுசெய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ், சின்னங்கள் வழங்கும் ஒழுங்கும் இந்தப்படைப்பிரிவால் செய்யப்பட்டுள்ளன.

# கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் மின்னொட்டு கற்கைநெறி ஆரம்பம்!

கிளிநொச்சி மாவட்டத்தின் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் மின்னொட்டுக் கற்கைநெறி அண்மையில் ஆரம்பமானது. இந்தக் கற்கைநெறி உலக கனேடிய பல் கலைககழக சேவை அனுசரணையுடன் நடைபெறுகின்றது. இந்தநிகழ்வு தொழில்நுட்பக் கல்விநிறுவன நிர்வாக உத்தியோகத்தர் கு.சேரன் தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன், கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் உலக கனேடிய பல்கலைக்கழக சேவையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட செயற்திட்ட இணைப்பாளர் ஜெயசீலன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், தொழில்நுட்பக் கல்வி நிறுவன ஆளுநர் சபையின் செயலாளருமான கி.சின்னராசா, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாக உத்தியோகத்தர் சுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

இந்தக் கற்கை நெறியில் பயிலும் மாணவர்களுக்கு நாளாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளன. (9)




## முதியோர்தின விழா

(கிளிநொச்சி)

வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தின் 7 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், முதியோர் தினமும் கடந்த சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை வன்னேரி வலய அரசியல் துறைப்பொறுப்பாளர் எழில்குமரன் ஏற்றிவைக்க, முதியோர் இல்லக் கொடியை பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் ஏற்றிவைத்தார். இந்த நிகழ்வில் 'முதியோரைப் பேணுவோம்' என்ற நூல் கிளிநொச்சி அரச அதிபரால் வெளியிட்டுவைக்க அதன் முதற் பிரதியை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேஷ் பெற்றுக்கொண்டார். (ஸ்ரீ)

## 16 பயனாளிகளுக்கு கடன் வழங்கல்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் நியாப திட்டத்தின் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கரைச்சி பிரதேச உதவி அரச அதிபர் சுலோஜினி கதிரவேற்பிள்ளை தலைமையில் ஜீவனோபாய கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் .16 பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கிராம அலுவலர், நியாப் திட்ட அலுவலர், மாயவனூர் பிரதேச கிராம அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வேகக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துமாறு மன்னார் வெள்ளாங்குள மக்கள் கோரிக்கை

மன்னார் - வெள்ளாங்குளம் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டு முறையை நடைமுறைப்படுத்துமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ளாங்குளம் பகுதியில் இருந்து பாலியாற்று வரையான வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதால், இந்த வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் அதிவேகமாகச் செல்கின்றன. இதனால் இந்த வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் மக்கள் விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே விபத்துக்களையும், உயிராபத்துக்களையும் தடுக்கும் முகமாக, சம்பந்தப்பட்டவர்கள் வேகக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு நாளும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு திலீபன் மருத்துவமனை போராளி மருத்துவர்களின் மருத்துவசேவையொன்று வவுனியா பூந்தோட்டத்தில் இடம்பெற்றபோது, இடம்பெயர்ந்து முகாமில் தங்கியிருக்கும் பெருந்தொகையான மக்கள் பயன்பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்:-கனகரவி)

# நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத மன்னார் - கூராய் தீது விநாயகர்குளம்

(மன்னார்)

மன்னார் கூராய் தீது விநாயகர் குளம் கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாகப் புனரமைக்கப்படாத நிலையிலுள்ளது.

இந்தக் குளம் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளமையால், இதனை நம்பி விவசாயம் செய்யும் 40 இற்கும் மேலான விவசாயிகள் விவசாய நடவடிக்கையை மேற்கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர்.

தற்பொழுது இந்தக் குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு கெபிக்கா என்ற அரசசார்பற்ற நிறுவனம் நிதி ஒதுக்கீடுசெய்துள்ளது.

இதனையடுத்து இந்தக் குளத்தில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்.*

திருக்குறள்

## நமது நோக்கு

# தாமதிக்கப்படும் நீதி, மறுக்கப்படும் நீதியே!

அமரர் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் நம்மை விட்டு கொடூரமான முறையில் பிரிக்கப்பட்டு நேற்று டன் நான்கு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

ஆனாலும் அந்தப் படுகொலையை நிகழ்த்தியவர்களின் நோக்கம் முழுமையாகத் தோற்றுப்போய்விட்ட நிலையில், நிமலராஜன் எங்கள் உணர்வுகளில் அதே மாறாத அப்பாவித்தனமான புன்னகை மிளிர அதே உயிர்ப்புடன் இன்னமும் வாழ்ந்துகொண்டே இருக்கிறான்.

செய்திகளை எழுதிக்கொண்டிருந்த செய்தியாளன் நிமலராஜனை விடவும், செய்தியாக மாறிவிட்ட நிமலராஜன் வலிமை மிக்கவனாவும் ஒரு வரலாற்றின் முக்கியஸ்தனாக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டவனாகவும் மட்டுமல்ல, இலங்கையில் பேரினவாத ஆட்சிப்பீடத்தவர்கள் ஜனநாயக சுதந்திரத்தின் முதுகெலும்பென வர்ணிக்கப்படும் ஊடக சுதந்திரத்தை எவ்வாறு துப்பாக்கி முனையில் வைத்து கௌரவிக்கிறார்கள் என்பதை தன் உயிரைக்கொடுத்து உலகிற்கு உணர்த்தியவனாகவும் விஸ்வரூபம் காட்டி நிற்கிறான். இதுவே நிமலராஜனைக் கொன்றவர்களுக்கு கிடைத் துள்ள அவமானகரமான தோல்வியாகும்.

நேற்றும் அதற்கு முன்தினமும், இன்றும் ஏன் நாளையும் கூட சகல ஊடகங்களும் நிமலராஜனை நினைவு கூர்ந்து செய்திகள் கட்டுரைகள் அஞ்சலிகள் என தொடர்ந்து வெளியிட்டு அவனது உணர்வுகளை மக்கள் மத்தியில் உயிர்ப்புறச் செய்யவே போகின்றன. இதேசமயம் இன்னமும் தண்டிக்கப்படாத அவனைக் கொன்ற கொலையாளிகளையும், அவர்களுக்கான தண்டனையை வழங்காது இழுத்தடித்துக் காலத்தைக் கடத்தும் வெளிச்சக்திகளையும் சபிக்கவும் போகின்றன. இந்த விடயமானது உலகிற்கு ஒரு செய்தியை உரத்துச் சொல்லவேபோகின்றது.

அதாவது மக்களுக்கான செய்திகளை உண்மையாகவும் நேர்மையாகவும் துணிச்சலுடனும் சமூக மற்றும் தேசியப் பொறுப்புடனும் தெரிவிக்கும் பணியை ஒரு மானிடக் கடமையாகவே மதித்துச் செயற்படும் எந்த ஊடகவியலாளனும் மரணத்திலும் வாழும் மகத்தான சக்திபடைத்தவன் என்பதே அந்தச் செய்தியாகும்.

அத்தகைய நெஞ்சுரமும், நேர்மைத்திறனும் கொண்ட எந்த ஊடகவியலாளனையும் துப்பாக்கி முனைகளாலோ, மிரளவைக்கும் அச்சுறுத்தல்களாலோ பணியவைக்கவோ, பயமுறுத்தவோ முடியாது. அவர்கள் மரணத்திற்கு அஞ்சாத பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் அவர்கள் அறம் கொல்லும் அரசுக்கும், நெறிபிறழும் அரசியல்வாதிகளுக்கும் என்றென்றும் அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்பதே உண்யையாகும். நிமலராஜனின் வாழ்வும், பணியும் இதையே உலகளாவிய ரீதியில் உலகிற்கு உணர்த்திநிற்கின்ற தெனலாம்.

உண்மையில் நிமலராஜனின் விடயத்தில் துப்பாக்கி முனை அவனது பேனாவின் கூர்மைகொண்ட முனைக்கு முன்னால் தோல்விகண்டுபோயிற்று என்றே கூறவேண்டும்.

சரி; நிமலராஜனின் மரணத்திற்கு காரணமான அந்த ஜனநாயகப் படுகொலையாளிகள் மீதான வழக்குகள் இன்னமும் முடியவில்லை. அதன் சூத்திரதாரிகள் இன்னமும் சட்டத்தின்முன் கொண்டுவந்து நிறுத்தப்படவில்லை. அவர்களுக்கான தண்டனைகள் வழங்கப்படுவது தாமதமாகிக் கொண்டே போவதானது, நீதி குற்றவாளிகளைப் பாதுகாக்க முயல்கிறதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் அதன் மீதான நம்பிக்யையும் அற்றுப்போக வைத்துள்ளது.

நீதி இலாகாவின் இந்த இழுத்தடிக்கும் மெத்தனப்போக்கும், அலட்சியமும் தொடர்ந்து இத்தகைய கொலைஞர்கள் உருவாகவே வழிவகுக்கும் என்பதை ஊடகவியலாளர் ஜீ.நடேசனின் படுகொலை உறுதிப்படுத்தியுள்ளது. நீதியின் நியாயமான பாதையில் ஆட்சி அதிகாரத்தின் அடாவடித்தன அச்சுறுத்தல் தொடர்வதானது நாட்டின் அரசு சர்வாதிகாரப் போக்கில் செயற்படுவதையே காட்டுகின்றது எனலாம்.

நீதிமன்றம் சட்ட மா அதிபரின் ஆணைக்காக நான்கு வருடம் காத்திருப்பதானது, "தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி" என்றே கருதப்படும் என்ற தத்துவத்தை உறுதி செய்வதாகவே உள்ளது.

இது இலங்கையில் நீதித்துறையின் அவலநிலைக்கு ஒருசான்றாகும். அரசியல் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் நீதித்துறையினதும், காவல்துறையினதும் சுயாதீனமான நேர்மையான செயற்பாடுகளில் தலையீடுசெய்து தமது அபிலாஷைகளுக்கு ஏற்று அதனை வழிநடத்த முனைவது தொடருமேயானால் மக்களே நீதியின் காவலர்களாக மாறவேண்டிய அபாயமும் ஏற்படும் என்றால் அது மிகையில்லை.

நிமலராஜன் படுகொலையும் அது தொடர்பாக நீதித்துறை காட்டும் பொறுமையும் நடேசனைப் போன்று மேலும் பலர் கொல்லப்படவே வழிவகுக்கும் என்பதை எச்சரிக்கையுடன் கூறவேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது.

ஆனாலும், உறுதிமிக்க ஊடகங்களும் சக்திமிக்க ஊடகவியலாளனின் பேனாவும், அநியாயங்களுக்கு எதிராக.. எழுதும்... போராடும்... தொடர்ந்தும் குரல் கொடுக்கும் இதனையே கடந்தகால வரலாறு உணர்த்தி நிற்கிறது.

## நாடும் நடப்பும்




செய்தி :- உரிய நேரத்தில் மாற்றுத் தீர்வுயோசனைகளை ஜனாதிபதி கையளிப்பார் என்கிறார் அமைச்சர் மங்கள சமரவீர.

# இரண்டாம் தொகுதிப் பட்டதாரிகளுக்கு நாளைமுதல் பயிற்சி நெறி ஆரம்பம்

இரண்டாவது தொகுதியாகத் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான பயிற்சிநெறி - நாளை 21 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு சகல பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

பட்டதாரிப் பயிலுனர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையில் உள்ள மாகாணசபையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை கடிதம் கிடைக்கப்பெறாத பட்டதாரிகள தமது பிரதேச செயலகங்களில் பார்வையிட்டு, பயிற்சி நெறியில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், நல்லூர், தீவகம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தொிவு செய்யப்பட்டோருக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும், சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் பிரதேச செயலகங்களைச சேர்ந்தவர்களுக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்திலும், தெல்லிப்பளை, கோப்பாய் பிரதேச செயலகங்களைச் சேர்ந்தவர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்திலும், கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு கொடிகாமம் மத்திய சந்தையின் மேல் மாடியில அமைந்துள்ள கொடிகாமம் பிரதேச சபை மண்டபத்திலும் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இதில் வடமராட்சி கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் - தமது விபரங்களையும், தமக்கான மண்டப விபரங்களையும் கரவெட்டி, சாவகச்சேரி பிரதேச செயலகங்களில் பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம்.

இந்த ஆரம்ப வைபவங்களில் அரச அதிபர் எஸ்.பத்மநாதன், உதவி அரச அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தமுறை இரண்டாவது தொகுதியாக யாழ். மாவட்டத்தில இருந்து பட்டதாரிகள் பயிலுனர்களாக 1649 பேர் பயிற்சி பெற உள்ளனர். இவர்களுக்கா 5 பயிற்சிநிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லஞ்ச ஊழல் ஒழிப்பு குறித்து படை அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பு

(கொழும்பு)

லஞ்ச ஊழலை ஒழிப்பதற்காகநியமிக்கப்பட்ட நிரந்தரக் குழுவானது ஆயுதப் படையினரில் உள்ள சகல அதிகாரிகள் மட்டத்திலும் தமது நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளித்து வருகிறது.

இந்தக் குழுவின் பணிப்பாளர் நாயகம் பியசேன ரணசிங்க மற்றும் இவரது குழு கிழக்குப் பகுதிகளிலுள்ள படை அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதற்காக கடந்த சனிக் கிழமை திருகோணமலையிலுள்ள கிழக்குப் பிராந்தியக் கடற்படைத்தளத்துக்குச் சென்றனர்.

இவ்வாறு சென்ற இவர்கள் லஞ்ச ஊழல் தொடர்பாகவும், அவற்றைத் தாம் ஒழிப்பதற்கு கையாளும் நடைமுறைகள் தொடர்பாகவும் கடற் படையின் சகலதர அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றும்போது, தெரிவித்தனர்.

## சிக்கன கடன் வழங்கும் சங்கத்திலிருந்து அங்கத்தவர்கள் பலர் இடைவிலகல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச் செயலகத்தில் இயங்கும் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து அதன் அங்கத்தவர்கள் பலர் இடை விலகி உள்ளனர்.

தற்போது இந்தச் சங்கத்தில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களும் மற்றும் அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுமே அங்கம் வகிக்கின்றனர்.

இந்தச் சங்கத்தில் உள்ள ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் கடந்த 10 வருடகாலத்திற்கு மேலாக இதில் அங்கத்துவம வகிப்பதால், இவர்களுக்கு கடன் வசதி வழங்கப்படுகிறது.

ஆனால் இந்தச் சங்கத்தில் 10 வருட காலமாக அங்கத்துவம் வகிக்கும் அலுவலக ஊழியர்களுக்கு எந்தக் கடன் வசதியும் வழங்கப்படவில்லை.

இதனை ஆட்சேபித்து பல அலுவலக ஊழியர்கள் அண்மைக காலமாக இந்தச் சங்கத்தில் இருந்து விலகிவருகின்றனர்.

எனவே நிர்வாகசபை அங்கத்தவர்கள் உடனடியாக கூட்டத்தைக் கூட்டி இடைவிலகிய அங்கத்தவர்களையும இணைத்துக் கொள்ளவேண்டும் என சங்கவட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

# மிருசுவில் கொலை வழக்கு மீளவும் விசாரிக்கப்படும்!

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

மிருசுவிலில் தமது வீடுகளைப் பார்ககச் சென்ற வேளை, படையினரால் எட்டுப் பொதுமக்கள் கொல்லப்பட்டு, புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் மீண் டும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்தார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வீடுகளைப் பார்க்கச் சென்ற எட்டு பொதுமக்கள் படையினரால் கொல்லப்பட்டு, புதைக்கப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட னர்.

இந்தக் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக ஐந்து இராணுவத்தினர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டு, வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டதுடன், இந்த 5 படையினரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - இந்த வழக்கை விசாரணை செய்வதற்கென மூன்றுபேர்கொண்ட நீதிபதிகள் குழு அமைக்கப்பட்ட போதிலும், அதில் ஒருவர் பதவி உயர்வுபெற்ற அதே நேரம், பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இதனால், வழக்கு விசாரணைகள் கடந்த ஒருவருடமாக இடம்பெறவில்லை.

தற்போது விசாரணைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக நீதிபதிகள் அடங்கிய புதிய குழுவொன்று அமைக்கப பட்டுள்ளதாகப் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்தார்.

இந்த வழக்கை மீண்டும் விசாரணை செய்வதற்கு நீதிபதிக்குழு அமைக்கப்படவுள்ளதாக பிரதம நீதியரசர் சரத் என். சில்வா மேலும் தெரிவித்தார். (01)

இந்திரஜித் | தெற்கிலிருந்து

# கட்சிகளின் திரைமறைவுப் பிளவும் அரசின் சமாதானம் நோக்கிய நகர்வும்...

நாட்டில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுவதில் பிரதான தடையாக இருப்பது தென்னிலங்கை அரசியல் என்பது அனைவருக்கும் தெரியும். முன்னர் தென்னிலங்கையில் உறுதி



யான அரசாங்கம் இல்லையென்ற நிலை காணப்பட்டதாக மட்டுமே கருத்துரைக்கப்பட்டு வந்தது. அந்த நேரத்தில் கூட்டு எதிர்க்கட்சி ஒன்று அவசரமாக தோற்றுவிக்கப்பட்டு அந்தக் கூட்டு எதிர்க்கட்சிக்கு ஐக்கிய தேசிய கட்சி தலைமையை ஏற்றிருந்தது.

ஆனால், அதன் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமது வழமையான பின்பற்றலான, அரசாங்கத்தில் இணையும் நடவடிக்கையை மேற்கொண்டதால் குறிப்பிட்ட எதிர்க்கட்சி வலுவிழந்து போனது. இதனை அடுத்து தேர்தலுக்காக மாத்திரம் பௌத்த மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போவதாக களம் இறங்கிய சிஹல உறுமயவின் திரைமறைவிலான ஜாதிக ஹெல உறுமய இன்று பிளவுபடும் நிலையை அடைந்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவை பொறுத்த வரையில் அது முன்னர் புலி எதிர்ப்பு என்ற போர்வையில் இனவாதத்தை கக்கி சிங்கள மக்கள் மத்தியில் இருந்து 9 நாடாளுமன்ற ஆசனங்களை பெற்றுக்கொண்டது. இந்த ஆசனங்களுக்குரியவர்கள் பௌத்த பிக்குகளாக இருந்த போதும், அரசியலுக்கு வந்த பின்னர் அவர்களும் பொய்யான அரசியல் வாதிகளாக மாறிவிட்டனர். ஆரம்பத்தில் அவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் பாணியில் நடந்து கொண்டாலும் தமது உறுப்பினர்கள் இருவர் அரசாங்கத்தின் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக கடத்தப்பட்டதை அடுத்து எதிர்க்கட்சியாக செயற்பட தலைப்பட்டார்கள்.

ஆனால் கிங்குராங்கொடையின் பௌத்த விகாரையில் ஆயுதங்களுடன் தமிழ் இளைஞர்களை வைத்திருந்தமை தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு சம்பந்தம் இருப்பதாக வெளியான தகவலை அடுத்து அந்தக் கட்சியை, நீதியின் முன்னால் நிறுத்தப் போவதாக பயமுறுத்தி அரசாங்க கட்சி தம் வசப்படுத்திக்கொள்ள முயற்சித்தது. இந்த நிலையில் கிங்குராங்கொட விஹாரையில் இருந்ததாக் கூறப்பட்ட 8 தமிழ் இளைஞர்களும் கொழும்பின் புறநகர்ப் பகுதி ஒன்றில் வைத்து கொல்லப்பட்டதை அடுத்து ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தின் பிடியில் இருந்து தப்பிக்கொண்டது.

தேசிய அரசியலில் அந்தக் கட்



சியினால் இந்தளவு காலம் நின்று பிடிக்க முடிந்த போதும், உட்கட்சி பூசலால இன்று அது நிலைகுழைந்து போய் காணப்படுகிறது. பௌத்த பிக்குகள் கடவுளுக்கு அடுத்த ஸ்தானத்தில் உள்ளவர்கள். எனவே, அவர்களால் கொண்டு செல்லப்படுகின்ற ஜாதிக ஹெல உறுமய கட்சி, சிஹல உறுமய என்ற சாதாரண மனிதர்களால் நடத்தப்படுகினற கட்சிக்கு அடிபணிந்து செல்ல முடியாது என்பதே ஜாதிக ஹெல உறுமயவில் உள்ள பெரும்பாலான பிக்குகளின் எண்ணமாகும். எனவே இந்தக் கருத்தை முன்வைத்து தற்சமயம் கொலன்னாவ சுமங்கல என்ற பௌத்தபிக்கு தமது நாடாளுமன்ற பதவியை விட்டு விலகியுள்ளார்.

கட்சியின் பொதுச்செயலராக உள்ள உடுவே தம்மலோக தேரரும் தற்சமயம் சிஹல உறுமயவின் தலையீட்டை வெளிப்படையாக விமர்சித்து கட்சியின் நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியுள்ளார்.

அதேவேளை மறுபுறத்தில் சிஹல உறுமயவுக்குள்ளும் அதிகாரப் போட்டி தலைதூக்கியதன் அடிப்படையில் அதன் தலைவரான திலக் கருணாரட்ன, தலைமைப் பதவியில் இருந்து விலகி தற்சமயம் தமது ஆரம்ப அடித்தளமான ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார். எனவே சிஹல உறுமயவும், ஜாதிக ஹெல உறுமயவும் இன்று குறுகிய காலகட்டத்தில் மீளமுடியாத கிடங்கில் வீழ்ந்துள்ளன.

இது எவ்வாறு தென்னிலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மையை பாதிக்கப் போகின்றன எனப் பார்ப்போமானால், நாடாளுமன்றத்தில் ஏதாவது சட்ட மூலத்தை அரசாங்கம் சமப்பிக்கும் போது அதற்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்காமல் சட்ட மூலத்தை நிறைவேற்ற அல்லது நிறைவேற்ற முடியாத நிலை ஒன்று இந்த ஜாதிக ஹெல உறுமயவின் உட்கட்சி முறுகலால் ஏற்படலாம்.

ஏனெனில் ஜாதிக ஹெல உறுமய முழுமையாக சிஹல உறுமயவைத் தவிர்ந்த பௌத்த பிக்குகளால் நிரப்பப்பட வேண்டும் என ஒரு சாரார் கோருகின்ற போதும், இன்று ஜாதிக ஹெல உறுமயவை முன்னின்று செயற்படுத்துகின்றவரான அந்தக் கட்சியின் பேச்சாளர் அத்துரலிய ரத்ன தேரர் சிஹல உறுமய கட்சியை சேர்ந்தவர் என்பதாலும், அதேபோல ஜாதிக ஹெல



உறுமயவின் தலைவரான எல்லாவல மேதானந்தவும் சிஹல உறுமயவுக்கு சார்பானவர் என்பதாலும், ஜாதிக ஹெல உறுமய என்ற கட்சி சிஹல உறுமயவை தவிர்த்து விட்டு அரசியல் செய்யக்கூடிய நிலை இல்லை என்றே கூற வேண்டும். எனவே நாடாளுமன்றத்திலும் இந்தப் பிளவு எதிரொலிக்குமாக இருந்தால் கட்சியின் இருசாராரும் இரண்டு கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுவார்கள். எனவே இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற சட்டமூலங்களில் இந்தப் பிளவு தாக்கத்தை கொண்டுவரக் கூடும், அத்துடன் அரசாங்கத்தின் ஆட்சி ஸ்திரத்தன்மைக்கும் இந்த பிளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

சமாதான முயற்சிகளில் அரசாங்கத்தின் நகர்வில் இன்னமும் தெளிவற்ற தன்மையே நிலவுகிறது. மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் எப்போது ஆரம்பிக்கும் என்ற நிலையை எதிர்வு கூற முடியாத நிலையிலேயே



அரசாங்கத்தின் நகர்வுகள் இருக்கின்றன. நாட்டில் பாரிய பொருளாதார வீழ்ச்சி நிலை காணப்படுகின்ற போதும், அது எதனால் ஏற்பட்டது என்பதை அரசாங்கம் மூடி மறைத்து அதற்காக பல காரணங்களை முன்வைக்க தலைப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படாத சூழ்நிலையில் நாட்டிற்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக் காது என்ற விடயத்தையும், இபபோதுள்ள பொருளாதார சீரழிவை சமாளிக்க உடனடியாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற உண்மைகளையும் அரசாங்கம் சிங்கள மக்கள் மத்தியில் மூடி மறைக்க முயல்கிறது. இதன் அடிப்படையிலேயே ஜனாதிபதியும் அத்தியாவசிய பொருட்களின் விலையுயர்வுகளுக்கு மத்தியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றியும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் கற்பனைக் கதைகளை கூறிவருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மக்கள் மீண்டும் தமது கட்சிக்கு எதிராக திரும்பி விடக்கூடாது என்பதை மையமாகக் கொண்டே அவர் இவ்வாறான கற்பனைக் கதைகளைப் புனைந்து வருகிறார். இதற்கு மத்தியில் ஜே.வி.பி தாம் தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்ற நிலையில் தற்சமயம் தாம் அரசாங்கத்தின் பங்காளிகள் அல்ல என்ற தொனியில் பேசி வந்தாலும், சில வேளைகளில் உண்மைகளையும் ஒத்துக் கொள்ள வேண்டியநிலை ஏற்படுகிறது. அண்மையில் ஜே.வி. பியின் அமைச்சரான லால்காந்த இந்த அரசாங்கம் பதவிக்கு வரு வதற்கு முன்னர் ஆயிரம் ரூபாய்களுக்கு கொள்வனவு செய்த பொருட்களை இன்று கொள்வனவு செய்ய ஐயாயிரம் ரூபா தேவைப்படுவதாக தெரிவித்துள்ளார். இதற்கு காரண மாக



உலக சந்தையில் எரிபொருட்களின் விலையுயர்வை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மறுபுறத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதி நிதியமைச்சருமான பந்துல குணவர்த்தன, அரசாங்கம் உலக சந்தையில் அதிகரித்துள்ள எரிபொருட்களின் விலைகளின் அடிப்படையில் எரிபொருட்களை கொள்வனவு செய்யவில்லை. அவை ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டவை. எனவே, நாட்டில் தற்போதைய எரிபொருள் விலையேற்றமானது அரசாங்கத்தின் உரிய பொருளாதாரக் கொள்கையின் மையே எனச் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கு அடுத்தபடியாக ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகளும், ஐக் கிய தேசியக் கட்சியினரும் தமது ஆட்சேபனையை வெளியிட்டுள்ள அரசாங்கத்தின் இடைக்கால மாற்று யோசனையை, அரசாங்கம் விரைவில் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கப்போவதாக கூறியிருப்பதும், சமாதான நகர்வில் அது உண்மையான விருப்பத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதையே உணர்த்தி நிற்கிறது.

எனவே, நாட்டில் சமாதான நகர்வுகள் தொடர்பான விடயங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியலமைப்பினர் நாடு திரும்பியதன் பின்னரே இடம்பெற வாய்ப்பிருக்கிறது. அதேநேரம் நோர்வேக்கு அடுத்தபடியாக இந்தியாவும், அமெரிக்காவும் சமாதான நகர்வில் அழுத்தம மிக்க சக்திகளாக தற்சமயம் உருவாகியுள்ளன என்பது அண்மைக் காலத்தில் நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெலகிசனும், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுக ளுக்குச் சென்று வந்தமையில் இருந்து தெரியவந்துள்ளது.

# நெய்தல் விழா - 2004 போட்டி முடிவுகள்

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியால் நடததபபட்ட - 'நெய்தல் விழா 2004' இதை ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டு, கடல்சார், கலை, கல்வி, கலாசாரப் போட்டிகளில் 500இற்கும் மேலான போட்டியாளர்கள் பங்கு பற்றியதாகவும், 100இற்கும் மேற்பட்டோர் பரிசில்களைத் தட்டிக் கொண்டதாகவும் முன்னணிச் செயலாளர் ம.குயினரன் தெரிவித்தார்.

நெய்தல் விழா போட்டி முடிவுகள் வருமாறு :

**கவிதைப் போட்டி**

**பொது** - 1ஆம் இடம் - செபதினி ஸ்ரனிஸ்லோஸ, 2ஆம் இடம் - அருள்தாசன தயாழினி, 3ஆம் இடம் - ஜெசிகா தவஞானம்.

**மேற்பிரிவு** - 1ஆம் இடம் - யேசுதாசன் மதிவாணி, 2ஆம் இடம் - ஜேம்ஸ் விமலதாஸ் ஜீவறாஜ், 3ஆம் இடம் - யேசுதாசன் மதியழகி.

**மத்தியபிரிவு** - 1ஆம் இடம் - கு.விஜேந்தினி, 2ஆம் இடம் - யூ.யூலிஸ்கெலினா, 3ஆம் இடம் - சு.தயாளினி.

**கீழ்ப்பிரிவு** - 1ஆம் இடம் - ரா.விஸ்ணு, 2ஆம் இடம் - இ.மேரிதரிசிக்கா.

**சிறுகதைப் போட்டி** - 1ஆம் இடம் - மெடோனா மரியதாஸ், 2ஆம் இடம் - இ.அனோல்ட் பிரதீஸ்.

**கட்டுரைப் போட்டி**

**மேற்பிரிவு** - 1ஆம் இடம் - யேசுதாசன் மதிவாணி, 2ஆம் இடம்- சுரேந்தினி பெனடிற், 3ஆம் இடம்- செபதினி ஸ்ரனிஸ்லோஸ்.

**மத்தியபிரிவு** - 1ஆம் இடம்- அன்ரனிக்குயின் றொனிற்ரன், 2ஆம் இடம் - கு.விஜேந்தினி, 3ஆம் இடம்- யோ. நிருசா, ஆறுதல் பரிசு - பெல்க்மன் சைலஸ் பிரதீபன்.

**கீழ்ப்பிரிவு** - 1ஆம் இடம் - யூலியஸ் யூறிக்கா, 2ஆம் இடம் - யூட்குமார் பிரியதர்சினி, ஆறுதல் பரிசு- அ.ஆன்யதானா.

**பேச்சுப் போட்டி**

**பெண்களுக்கான மேல் பிரிவு** - 1ஆம் இடம் - இம்மனுவல் அனுசியா.

**ஆண்கள் மேற்பிரிவு** - 1ஆம் இடம் - சாமிநாதர் சாள்ஸ்.

**மத்திய பிரிவு பெண்** - 1ஆம இடம் - யேசுதாசன் டெனுசியா, 2ஆம் இடம் - கிருபைராஜன் நினோஜா, 3ஆம் இடம் - செபஸ்தியாம்பிள்ளை நிலுசியா.

**மத்தியபிரிவு ஆண்கள்** - 1ஆம் இடம் - தர்மராஜா நிமல்ராஜ், 2ஆம் இடம் - உதயகுமாரன், டியூனிஸ்நிரான்

**தனிப்பாடல்**

**மேல்பிரிவு** - 1ஆம் இடம் - பிலிப் ஜெனான், 2ஆம் இடம் - இருவர் - சிசுலிரியான், கி.தனீஸ்வரி, 3ஆம் இடம் - அ.யேசுராசா.

**மத்தியபிரிவு** - 1ஆம் இடம்- மேரிநிஷானி, 2ஆம் இடம் - சந்திரசேகர் சுஜந்தன், 3ஆம் இடம் - நெல்சன் அனோஜ்.

**கிராமிய நடனம்**

**மேல்பிரிவு** - 1ஆம் இடம் - இரணடு பரிசு - சென் ஜேம்ஸ் மகாவிததியாலயம், சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, 2ஆம் இடம் - சென்மியோ விளையாட்டுக் கழகம்.

**மத்திய பிரிவு** - 1ஆம் இடம்- சென் ஜேம்ஸ் கல்வி முன்னேறறக் கழகம், 2ம் இடம் - சென் ஜேம்ஸ மகளிர் பாடசாலை.

**அம்பா பாடல்** - 1ஆம் இடம்- யாகப்பர் கலாமன்றம், 2ஆம் இடம்- புனித கிறிஸ்தோப்பர் கடற் சாரணர் குழு, 3ஆம் இடம் - கல்வி முன்னேற்றக்கழகம்.

**நாட்டுக் கூத்து** - 1ஆம் இடம- யாகப்பர் கலாமன்றம்.

**நாடகம்** - 1ஆம் இடம் - குருநகர் கடற்சாரணர் குழு.

**நாட்டுக்கூத்து தனிப் பாடல்** - 1ஆம் இடம் - அ.விதுஷன், 2ஆம் இடம் பிஅஞ்சலோ டொனஸ் கீசைன்.

**சைக்கிள் ஓட்டம்** - 1ஆம் இடம் - டெ.ஜெறாஜ், 2ஆம் இடம்- மு.ஜெயம் 3ஆம் இடம்- இறாக்சு (றாஜிப்)

**மரதன் ஓட்டம்** - 1ஆம் இடம் செபஸ்ரியன் தீபன், 2ஆம் இடம் இ.லெணாண்டோ (ஜெனாட்), 3ஆம் இடம் செ.மைக்கல் (ரவி)

**உதைபந்தாட்டம்** - 16 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் சைனிஸ் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம் ஜேம்ஸ் மீன் விளையாட்டுக்கழகம்

**வலைப்பந்தாட்டம்**

**பெண்கள்** - 1ஆம் இடம் - ரத்தினாஸ் விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம் - சிக்ஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

**மென்பந்தாட்டம்** - 1ஆம் இடம்-சிக்ஸ்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம் - உதய சூரியன் விளையாட்டுக்கழகம்

**எல்லே** - 1ஆம் இடம் - சிக்ஸ் ஸ்ரார் விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம - சென்மியோ விளையாட்டுக்கழகம்.

**வள்ளம் தாங்கல்** - 1ஆம் இடம் - ஞானசீலன் ஜெகன், கார்லூஸ் காண்டீபன், நகீம் வசந்தன் 2ஆம் இடம் - ம.செல்டன், அன்ரன் கிளம்பட், அசுமன், 3ஆம் இடம் - சே.முரளி, பி.காண்டீபன், ம.சுரேஸ்.

**நீந்தல் போட்டி** -

**மேல் பிரிவு** - 1ஆம் இடம்- ரா.குயின்ரன், 2ஆம் இடம் -யூலியஸ் நாராணி (சுக்குட்டி), 3ஆம் இடம் - றொட்றிக்கோ ஜோன்சன் (போஞ்சி).

**கீழ்ப்பிரிவு** - 1ஆம் இடம் - சகாயராசா தர்மராஜன் (ஜெயா), 2ஆம் இடம் - ஞா.துஷாந்தன், 3ஆம் இடம் - யோன் பொஸ்கோ கார்த்திகன்

**படகோட்டம்**

**பிரிவு - 1**

1ஆம் இடம் இம்மனுவல் டென்சன் டினேசியஸ், விக்ரர் சொபிகா, இரண்டாம் இடம் - பிலிப் டன்சன், தோமஸ் றொபின்சன், 3ஆம் இடம் - ஜேக்கப் செல்வன் இம்மனுவேல்

**பிரிவு - 2** - 1ஆம் இடம் - அந்தோனிப்பிள்ளை, ஜேம்ஸ்கிலார், 2ஆம் இடம் - எம்செல்வராஜா, முடியப்பு யோன்சன், 3ஆம் இடம் - ராசுகுயின்ரன். (206)

# மின்னல் தாக்கியதில் பொருட்கள் சேதம்

இடியுடன் கூடிய மழை நேரத்தில் மின்னல் தாக்கியதில் வீட்டின் பொருட்கள் பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் உரும்பிராய் பகுதியிலுள்ள துரைராஜா என்பவரது வீட்டிலேயே இடம் பெற்றுள்ளது.

கடந்தவாரம பெய்த மழை காரணமாகவே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்த வீட்டிலிருந்த ரீவி, டெக் மற்றும் தொலை பேசிகள் சேதமடைந்ததோடு, மின்சார இணைப்புக்களும் எரிந்து செயலிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்

# தமிழக - கர்நாடக பொலிஸாரைக் கலக்கிய

# சந்தனக் கடத்தல் வீரப்பன் சுட்டுக்கொலை!



## சிகிச்சைக்கு வெளியே வந்தபோது பொலிஸ் அதிரடிப்படை கைவரிசை!







(சென்னை)

தமிழக, கர்நாடக மாநில அரசுகளுக்கும், பொலிசாருக்கும் கடந்த இருபது ஆண்டுகளாக சிம்மசொப்பனமாக - இரு மாநில எல்லைப் பகுதி காட்டுப்பகுதியில் தலைமறைவு வாழ்க்கை நடத்திவந்த சந்தன மரக்கடத்தல் வீரப்பனும் அவரது உதவியாளர்கள் மூன்றுபேரும் நேற்றுமுன்தினம் இரவு தமிழக அதிரடிப்படை பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கண் பார்வைக் குறைவுக்கான சத்திர சிகிச்சை, மற்றும் கையில் ஏற்பட்டிருந்த நீண்டநாள் வெட்டுக்காயம் போன்றவற்றுக்கு சிகிச்சை பெறுவதற்காக தர்மபுரி அருகேயுள்ள செல்லியம்பிட்டி தொழுநோய் வைத்தியசாலைக்கு வந்த வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே மூன்றுமுறை வீரப்பனும் அவரது உதவியாளர்களும் இந்த வைத்தியசாலைக்கு இரகசியமான முறையில் வந்து சிகிச்சை பெற்றுச் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலையும் நான்காவது முறையாக செல்லியம்பிட்டி வைத்தியசாலைக்கு செல்வதற்காக வீரப்பனும் அவரது கூட்டாளிகள் மூவரும் காட்டுக்குள் இருந்து வெளியே அம்புலன்ஸ் வாகனத்தில் வந்தனர்.

சேலம் வைத்தியசாலையின் பெயர் பொறிக்கப்பட்ட அம்புலன்ஸ் வாகனமொன்றில் வீரப்பனும் அவரது உதவியாளர் மூவரும் வருவதாகவும், எனவே அவர்களைப் பிடித்துக் கொள்ளுமாறும் இந்த வாகனத்தைச் செலுத்திவந்த சாரதி அதிரடிப்படையினருக்கு இரகசிய தகவலை வழங்கினார்.

இந்தத் தகவல் கிடைத்ததும் கூடுதல் டி.ஜி.பி.விஜயகுமார் தலைமையிலான அதிரடிப்படையினர் வீரப்பன் குழுவினரைப் பிடிப்பதற்கு வியூகங்களை அமைக்கத் தொடங்கினர்.

இதன்படி டி.ஐ.ஜி தமிழ்ச்செல்வன் முன்னிலையில் மூன்று பிரிவாக அதிரடிப்படையினர் பிரிந்து தர்மபுரி அருகே பாடி - பாப்பாரப்பட்டி வீதியிலுள்ள மறைவிடங்களில் பதுங்கியிருந்ததுடன் வீரப்பன் குழுவினர் தாக்குதல் நடத்தினால் தம்மைத் தற்காத்துக்கொள்ளும் நடவடிக்கைக்காக முன்னெச்சரிக்கையுடன் ஆங்காங்கே மணல்மூடைகளும் அடுக்கி, பதுங்குகுழிகளையும் அதிரப்படைப் பொலிஸார் அமைத்தனர்.

இந்தநிலையில் இந்திய நேரப்படி நேற்றுமுன்தினமிரவு 10.50 மணிக்கு வீரப்பனும் அவரது உதவியாளர்கள் மூவரும் மற்றும் வாகன சாரதி என நால்வர் அம்புலன்ஸ் வாகனத்தில் ஒகனேக்கல் காட்டுப்பகுதியிலிருந்து வந்தனர்.

இந்த அம்புலன்ஸ் வாகனத்தின் கண்ணாடிப் பக்கங்கள் அனைத்தும் திரைச்சீலைகள் போட்டு மூடப்பட்டிருந்தன. இந்த வாகனத்தை அதிரடிப்படையினர் கலைத்துச் சென்று பாப்பாரப்பட்டி வீதியிலுள்ள செல்லியம்பட்டி அருகே வழிமறித்தனர்.

இதனையடுத்து வீரப்பனையும் அவரது உதவியாளர்களையும் சரணடையுமாறு அதிரடிப்படையினர் அறிவித்தபோதும் அதனை அவர்கள் ஏற்க மறுத்ததுடன் அதிரடிப்படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனையடுத்து அதிரடிப்படையினரும் பதிலுக்கு வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் வீரப்பன் உட்பட நால்வரும் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் வீரப்பன் அவரது உதவியாளர்களான சேத்துக்குளி கோவிந்தன், சத்திரகவுடா, சேதுமணி ஆகியோரே உயிரிழந்தவர்களாகவர்.

கொல்லப்பட்ட வீரப்பன் மற்றும் அவரது உதவியாளர்கள் மூவரதும் சடலங்கள் பிரதேச பரிசோதனைக்காக தர்மபுரி அரசாங்க வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. இந்தச் சடலங்களுக்கு பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் வீரப்பனின் சடலம் அவரது மனைவியான முத்துலட்சுமியிடம் நேற்று ஒப்படைக்கப்பட இருந்தது.

வீரப்பனும் அவரது உதவியாளர்களும் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்தைப் பார்வையிடவும், அவர்களது சடலங்களைப் பார்வையிடவும் மக்கள் பெருமளவில் சென்றவண்ணமுள்ளனர். ஆனாலும் சடலங்களைப் பார்வையிட எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

வீரப்பனின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக, தன்னை பரோலில் விடுவிக்குமாறு சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ள வீரப்பனின் அண்ணன் மாதையன் சென்னை உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வீரப்பனைக் கொன்றது எப்படி? விபரிக்கிறார் பொலிஸ் அதிகாரி!



டி.எஸ்.பி. விஜயகுமார்

இரகசிய புலனாய்வு நடவடிக்கை மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நாம் விரித்த வலைக்குள் வந்து வீரப்பன் மாட்டிக்கொண்டதாக தமிழக விசேட அதிரடிப்படைப் பிரிவின் கூடுதல் டிஎஸ்பியான விஜயகுமார் தெரிவித்தார்.

வீரப்பனைச் சுட்டுக்கொல்ல 'பட்டுக்கூடு' நடவடிக்கைக்கு திட்டமிட்டுத் தலைமை தாங்கிய இவர் இந்தச் சம்பவம் குறித்து விபரிக்கையில் :-

வீரப்பன் குழுவில் நான்கு பேரே இருப்பதாக எமது புலனாய்வுத் தகவல் கள் மூலம் தெரியவந்தது.

காட்டுக்குள் இந்த நால்வரும் வெவ்வேறு திசைகளில் சிந்திக்கத் தலைப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்தன. வீரப்பனுக்கு கண்ணில் ஏற்பட்ட நோயால் அவதிப்பட்டு வந்தார்.

அடுத்ததாக சேத்துக்குழி கோவிந்தன் – வீரப்பனை வீழ்த்திவிட்டு தானே அணியின் தலைவனாகத் திட்டமிட்டிருந்தார்.

எஞ்சிய இருவருக்கும் குடும்பத்தினருடன் இணைந்துகொள்வது பற்றிய சிந்தனை உருவாகியிருந்தது. இதனால் இவர்கள் இருவரும் காட்டுக்குச் செல்வோரிடத்தில் தமது பெற்றோர் குறித்த விபரங்களை விசாரிக்கத் தொடங்கினர்.

நான்கு பேரும் வெவ்வேறு திசைகளில் சிந்தித்துவருவதாகக் கிடைத்த தகவலை அடுத்து – சந்தர்ப்பத்தைப் பயன்படுத் திக்கொள்ளத் திட்டமிட்டோம்.

இதன்படி அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவரை வீரப்பனின் கூட்டணிக்குள் ஊடுருவச்செய்து முக்கிய தகவல்களைத் திரட்டினோம்.

இதையடுத்து வீரப்பனுக்கு ஏற்பட்ட கண்பார்வை குறைபாட்டுக்கு இரகசியமாக சத்திரசிகிச்சை செய்துகொள்ள வசதிகள் செய்துதருவதாக எமது உளவாளிகள் மூலம் நம்பிக்கையூட்டினோம்.



வீரப்பன் | சேத்துக்குளி கோவிந்தன் | சந்தன கவுடா | சேத்துமலை

எமது திட்டப்படியே – வீரப்பன் காட்டிலிருந்து வெளியே வருவது குறித்து புலனாய்வுத்துறை மூலம் எங்களுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இந்தத் தகவலில் வீரப்பன் அம்புலன்ஸ் வாகனத்தில் காட்டிலிருந்து தர்மபுரி பகுதிக் குச் செல்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந் தது. இதனையடுத்து அதிரடிப்படைப் பொலிஸார் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து ஒவ்வொரு பாதையிலும் வீதி ரோந்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் தர்மபுரி அருகே எட்டாவது கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாடி என்ற இடத்தில் சேலம் ஆஸ்பத்திரி என்ற பெயர் ஆங்கில எழுத்துக்களால் எழுதப்பட்ட அம்புலன்ஸ் வாகனம் வந்தது.

இந்த அம்புலன்ஸை நாமே வீரப்பனின் இடத்துக்கு அனுப்பி அவரை வைத்திய சிகிச்சைக்காக அழைத்துவந்தோம். இவ்வாறு அழைத்துவரப்பட்ட வீரப்பன் குழுவினரை சரணடையுமாறு நாம் கோரியபோதும் அவர்கள் அதற்கு மறுத்ததுடன் எம்மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனையடுத்து அதிரடிப்படையினர் வீரப்பன் குழுவினர் இருந்த வாகனம் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட வேளை வீரப்பன் அந்த இடத்திலேயே கொல்லப்பட மற்றைய மூவரும் காயமடைந்த நிலையில் தர்மபுரி அரசாங்க வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போதும் அவர்கள் வழியிலேயே உயிரிழந்துவிட்டனர். இதன் போது வீரப்பன் தனது முறுக்கு மீசையை ஒட்ட வெட்டியிருந்தார்.

அத்துடன் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர் வீரப்பன்தான் என் பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியும். இதற்கு மரபணுப் பரிசோதனை செய்ய வேண்டிய தேவையில்லை. வீரப்பனையும் அவரது உதவியாளர்களையும் பிடிப் பதற்கான இந்த நடவடிக்கைக்கு 'பட்டுக் கூடு' படை நடவடிக்கை எனப் பெயரி டப்பட்டது.

இந்த நடவடிக்கையில் எமது தரப்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்ச கர் ஹிசைன் இன்ஸ்பெக்டர் ராஜராஜன் மற்றும் பொலிஸ் கொன்ஸ்டபிள்களான தண்டபானி மற்றும் ராமசாமி ஆகியோரும் காயமடைநதனர். இவர்கள் அனை வரும் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

வீரப்பனைப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட விசேட அதிரடிப்படைப் பொலிஸாரின் பணி முடிவடைந்துள்ள நிலை யில் அதனைக் கலைப்பதா அல்லது இல்லையா என்பது குறித்து அரசுதான் முடிவெடுக்க வேண்டுமெனவும் தமிழக விசேட அதிரடிப்படைப் பிரிவின் டிஎஸ்.பி. விஜய குமார் தெரிவித்தார்.

## 752 அதிரடிப்படையினருக்கும் தலா 3 லட்சம் ரூபா பரிசு!

### முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு



வீரப்பனையும் அவரது மூன்று உதவியாளர்களையும் சுட்டுக்கொன்றதற்காக இதற்கென விசேடமாக உருவாக்கப்பட்ட 752 அதிரடிப்படைப் பொலிஸாருக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளதுடன் ஒவ்வொருவருக்கும் வீடுகளும் இந்திய மதிப்பில் மூன்று இலட்சம் ரூபா பரிசுத் தொகையும் வழங்கப்படுமென தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்ததாவது –

இந்தத் தினம் தமிழக காவல்துறைக்கும் தமிழக அரசுக்கும் தனிப்பட்ட முறையில் எனக்கும் மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாகும். இந்த நல்ல செய்தியை சிறப்பு அதிரடிப்படைத் தலைவர் விஜயகுமார் எனக்குத் தெரிவித்தார். இது நான் முதலமைச்சராக வந்த பின்னர் எனக்கு வந்த மிக நல்ல செய்தியாகும்.



இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட 752 அதிரடிப் படை வீரர்கள், வாகனச் சாரதிகள் இதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நான் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்களின் பணி சாதாரண பணியல்ல அதிரடிப்படை வீரர்கள் நீண்டகாலமாக தமது குடும்பங்களைப் பிரிந்து அடர்ந்த காடுகளில் தங்கள் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். எனவே தங்களுக்கு வழங்கப்பட்ட இலக்கினை அவர்கள் வெற்றிகரமாக செய்து முடித்துவிட்டனர். வீரப்பனைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்ட 752 அதிரடிப்படை வீரர்களுக்கும் பதவியுயர்வு உடனேயே வழங்கப்படு வதுடன் ஒவ்வொருவருக்கும் மூன்று லட்சம் ரூபா ரொக்கப்பரிசும் வழங்கப்படும். அத்துடன் அவர்கள் விரும்பும் இடத்தில் வீடொன்றும் அமைத்துக்கொடுக்கப்படும். வீரப்பனைப் பிடிப்பதற்காக இதுவரை 50 கோடியே செலவானது. ஆனால் சில ஊடகங் கள் 1500 கோடி எனத் தெரிவித்த தகவல்கள் தவறானவை எனவும் அவர் தெரிவித்தார்.

## உயிருடன் பிடிபட்டிருந்தால் உதவியவர்கள் மாட்டியிருப்பர்!

### கர்நாடக முதல்வர் தரம்சிங் தெரிவிப்பு



வீரப்பனும் அவரது உதவியாளர்களும் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு தமிழக அதிரடிப்படையினருக்கு பராட்டுத் தெரிவிப்பதாகவும் இதன்மூலம் வீரப்பனின் அநீதிச் செயல்களுக்கு முடிவு ஏற்பட்டுள்ளதுடன் அதிரடிப்படையினரின் விடாமுயற்சிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி இதுவெனவும் கர்நாடக முதலமைச்சர் தரம்சிங் தெரிவித்தார்.

பெங்களூரில் ஊடகவியலாளர்களுக்கு இது தொடர்பாகத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

வீரப்பனையும் அவரது உதவியாளர்களையும் உயிருடன் பிடித்திருந்தால் அவர்களுக்கு உதவிசெய்தவர்கள் குறித்து முழுமையான தகவல்கள் வெளிவந்திருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக அவர்கள் கொல்லப்பட்டு விட்டனர். இருந்தபோதும் அவர்களுக்கு உதவி வழங்கியவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஆசிரியர் சேவை தரமுயர்வு விரைவில் நடைமுறைக்கு!

(திருகோணமலை)

இலங்கை ஆசிரியர் சேவையில் ஒரு தரத்தில் இருந்து அடுத்த தரத்துக்கு அல்லது ஒரு வகுப்பில் இருந்து அடுத்த வகுப்புக்கு சுயமாக பதவியுயர்வு பெறும் திட்டம் சில சாதகமான மாற்றங்களுடன் விரைவாக நடைமுறைக்குவரும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

கடந்தவாரம் கல்வி அமைச்சின் செயலாளர் அமைச்சின் அதிகாரிகளுடன் இருநாட்களாக நடத்திய இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளின் அடிப்படையிலேயே இந்தமுடிவுகளைத் தான் தெரிவிப்பதாகவும் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் பதவி உயர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு -

புள்ளிகளின் அடிப்படையில் சுயமாக பதவியுயர்வு (Automatic Promotion) வழங்கும் கால எல்லை 31-12-2004 வரை நீடிக்கப்படும்.

ஆசிரிய சேவை வகுப்பு ஒன்றுக்கு பதவியுயர்வு பெறுவதற்கு இதுவரை இருந்த 50 வயதை அடைய வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படும்.

விஞ்ஞானம், கணிதம், விவசாயம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் ஒன்றைப் பட்டப்படிப்பில் ஒரு பாடமாக மேற்கொண்ட பொதுப் பட்டதாரி ஆசிரியர்களின் 6-10-1994 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதிக்கு விசேடபட்டதாரிகளாகக் கணிக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு இரு புள்ளிகள் என்ற அடிப்படையில் புள்ளிகள் கணிப்பிடப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

பயிற்றப்பட்ட பட்டதாரிகளுக்கும் 16.10.1994ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதிக்கு பட்டப்பின் டிப்ளோமா பட்டதாரிகளாகக் கணிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு இரு புள்ளிகள் என்ற அடிப்படையில் புள்ளிகள் கணக்கிடப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர் அல்லது பட்டதாரி, விசேட பட்டதாரி, அல்லது பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டம் அல்லது பயிற்றப்பட்ட பட்டதாரி ஆகியோருக்கு புள்ளிகள் வழங்கப்பட்ட பின் எஞ்சியுள்ள சேவைக் காலப் பகுதி 6 மாதம் அல்லது அதற்குக் கூடியதான காலப் பகுதிக்கு ஒரு புள்ளி வழங்கப்படும்.

பயிற்றப்படாத ஆசிரியர் அல்லது தகுதிகான் ஆசிரியர் அல்லது பயிலுனர் ஆசிரியர்களுக்குப் புள்ளிகள் வழங்கப்பட்டபின் எஞ்சியுள்ள சேவைக்காலப் பகுதி 12 மாதம் அல்லது அதற்குக் கூடிய காலப்பகுதிக்கு ஒரு புள்ளி வழங்கப்படும்.

குண்டசாலை விவசாயப் பயிற்சி போன்ற 2 வருட டிப்ளோமா அல்லது சங்கீத பூசணம் போன்ற 3 வருட டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் சம்பளத்திட்டதில் வைத்து ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படுவர்.

பயிலுநர் ஆசிரியர்களின் 06.10.94 திகதிக்கு முன்னரான காலப்பகுதிககு ஒரு வருடத்துக்கு ஒரு புள்ளி என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களின்6-10-1994 திகதிக்கு முன்னரான காலப்பகுதிக்கு ஒரு வருடத்துக்கு ஒரு புள்ளி என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

மேற்படி முடிவுகள் யாவும் கல்வி அமைச்சின் அதிகாரிகளாலும் பிரதான தொழிற்சங்கங்களாலும் இணைந்து எடுக்கப்பட்டவையாகும்.

இந்த முடிவுகள் தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு பொதுச்சேவை ஆணைக் குழுவின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்படும்.

அமைச்சரவையின் அங்கீகாரமும், பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரமும் கிடைத்தவுடன் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக சகல மாகாண கல்விச் செயலாளர்களுக்கும் மாகாண கல்விப்பணிப்பாளருக்கும், வலயக் கல்விப்பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்கப்படும்.

அனேகமாக டிசம்பர் மாதம் முடிவதற்குமுன் இந்தச் சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்படும் என எதிர்பார்க்கலாம் எனத் தெரிவித்த அமைச்சின் அதிகாரிகள் பதவியுயர்வுகள் கிடைக்க வேண்டிய திகதியில் இருந்து வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

(10)



திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்துடன் கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம். (04)

# பாதுகாப்பு உடன்பாடு குறித்த பேச்சுக்கள் ஆரம்பமாகின!

(கொழும்பு)

உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பாக ஐந்து பேரைக் கொண்ட உயர்மட்ட இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் குழுவுக்கும் இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று பேச்சுக்கள இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்திய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் கிசார் தலைமையிலான குழுவுக்கும், சிறில் ஹேரத் தலைமையிலான இலங்கைக் குழுவுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்துடன் இலங்கைக் குழுவின் தரப்பில், முப்படைத் தளபதிகள், வெளிவிவகார அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள் ஜனாதிபதியின் ஆலோசகர் நிகெல ஹட்ச் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இராணுவப் பயிற்சிகளை வழங்குதல், புலனாய்வுத் தகவல்களைப் பரிமாற்றம் செய்தல், கடற்பிரதேசக் கண்காணிப்பு, சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

# புலிகளின் ஆதரவாளர் ஏறாவூரில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு - ஏறாவூர் ஐயன் கேணியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளின் ஆதரவாளரொருவர் இனந்தெரியாத நபர்களால் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட ராஜு என அழைக்கப்படும் கதிர்காமத்தம்பி (வயது 42) என்ற இந்தநபர்ஏற்கனவே விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து சில வருடங்களுக்கு முன்னர் விலகியவர் என தெரிவிக்கப்படுகின்றது.

உறவினரொருவரின் வீட்டில் இவர் உறக்கத்திலிருந்த சமயம் அங்கு அத்துமீறி நுழைந்த ஆயுதபாணிகள் திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்த இவர் மீது கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ரி-56 ரக துப்பாக்கிக்குரிய 18 வெற்றுத் தோட்டாக்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இது குறித்து ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தியாவுக்கு பயணம்!

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், விரைவில் இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வாறு செல்லும் இவர்கள், அங்குள்ள முக்கிய அரசியல் தலைவர்களுடன் இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

கூடடமைப்பினரின் இந்த விஜயம் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்துக்கு முன்னரோ அல்லது அதன்பின்னரோ இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (01)

## அரசாங்கத்திற்கு.....

வும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

மேலும், நாட்டில் உள்ள இன முரண்பாட்டினை தீர்த்து வைப்பதற்கான சமாதான நடவடிக்கைகளை தாமதமின்றி அரசாங்கம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.

மேலும், பாரியதொரு பொருளாதார நெருக்கடியை நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள போதும், இந்த நெருக்கடியிலிருந்து நாட்டு மக்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை எதனையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் குற்றஞ்சாட்டினர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் மத்தியில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் - அரசாங்கம் வெளியிட்டுவரும் குழப்பமான கருத்துக்களால்தான் சமாதான நடவடிக்கை ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் சமாதான நடவடிக்கைகளை முன்னகர்த்திச் செல்வதற்கும் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கும் அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன - எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை ஆட்சியிலிருந்து வீழ்த்தி ஐக்கிய தேசியக் கட்சி புதியதொரு அரசை அமைக்குமெனத் தெரிவித்தார்.

## யாழ்.பஸ்....

சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் காணப்பட்டனர்.

இந்த எதிர்ப்பு போராட்டத்தில் மதகுருமார், ஊடகவியலாளர்கள் மாணவர்கள், எனப் பெரும் தொகையானோர் கலந்துகொண்டனர். இந்தப் போராட்டம் சுமார் ஒரு மணி நேரமாக இடம்பெற்றது.

இதேவேளை, மறைந்த ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் நேற்று மாலை 2.45 மணியளவில் பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தேசியக் கொடியை ஏற்றினார்.

இதனைத் தொடர்ந்து ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது. பின்னர் யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த சுதர்சன் மற்றும் யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் உரையாற்றினர்.

## கூட்டமைப்பு....

தார்.

நேற்று முற்பகல் சம்பூரிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்துக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து நேற்று முற்பகல் 11.45 க்கு மூதூர் முஸ்லிம் பிரதிநிதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து உரையாடியுள்ளனர்.

## புலிகளின்....

பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் அன்ரன் பாலசிங்கத்துக்கு எடுத்து விளக்கினார்.

அத்துடன் இந்தச் சந்திப்புக்களின்போது, அமெரிக்க மற்றும் கனடிய இராஜதந்திரிகள் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப் படவேண்டுமென்பதை இருதரப்பினரையும் வலியுறுத்தும்படி தன்னிடம் தெரிவித்ததாக எரிக்சொல்ஹெய்ம் அன்ரன் பாலசிங்கத்திடம் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இலங்கையின் சமகால அரசியல் நிலைமைகள், கிழக்கு மாகாண நிலைமைகள் குறித்து அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிற்கு எடுத்து விளக்கியுள்ளார்.

## கிங்ஸ்லி....

இராசநாயகம் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அவரது மெய்க்காவலரான பொலிஸ் கொன்ஸ்டபிள் காயமடைந்தார்.

ஓய்வு பெற்ற மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளரான கிங்ஸ்லி இராசநாயகம் கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டதன் மூலம் அரசியலில் பிரவேசித்தார்.

விருப்பு வாக்கு அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினராக 4 ஆவது இடத்திற்கு தெரிவான இவர், பதவிப் பிரமாணம் செய்யாமலே ஒருமாத காலத்திற்குள் சுயவிருப்பத்தின் அடிப்படையில் அதிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஜெயந்திபுரம் பொலிஸ் காவல் நிலையம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ....

தானச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் சூசையும் அவரது மருத்துவக்குழுவும் கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்கு வருவதற்கு அதன்பின் அவர்களின் செலவில் வெளிநாடு செல்ல அனுமதித்ததாக அரசாங்க சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

# காணாமற்போனோர் வழக்கு: சாவகச்சேரி நீதிமன்றுக்கு மாற்றுமாறு உத்தரவு!

1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்.மாவட்டத்தில் காணாமற்போன வேலுப்பிள்ளை உதயகுமார் என்பவரின் வழக்குத் தொடர்பான குழு விசாரணையை சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு மாற்றுமாறும், விசாரணைகள் முடிந்த பின்னர் அது பற்றிய அறிக்கையை யாழ். மேல் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறும், சாவகச்சேரி நீதிவானுக்கு யாழ். நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

யாழ். மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பான ஆறு வழக்குகள் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் கூப்பிடப்பட்டது.

வேலுப்பிள்ளை உதயகுமார் என்பவர் வழக்கில் 1ஆம் எதிரியாக குறிப்பிடப்பட்டிருக்கும் - முன்னாள் கொடிகாம இராணுவ முகாம் பொறுபதிகாரியாக பணியாற்றிய லெப். கேணல் மகிந்தரட்ண தனது சார்பிலான ஆட்சேபனையை இராணுவத்தின் நலனைக் கவனிப்பதற்காக மன்றில் பிரசன்னமாயிருந்த இராணுவ சட்டத்தரணி கப்டன் குருப்பு மூலம் சமர்ப்பித்தார்.

மூன்றாம் எதிரி மனுதாரரான லெப் ஜெனரல் லயனல் பலகல்ல சார்பான ஆட்சேபனையை அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமி மன்றில் சமர்ப்பித்தார்.

இதனை அடுத்து கிராம சேவக உத்தியோகத்தர் மூலமும், இராணுவத்தினரிடமும் ஒப்படைக்கப்பட்ட வேலுப்பிள்ளை உதயகுமார் காணாமற்போனமை தொடர்பாக சந்தேகம் ஏற்படுகின்றமையால் விசாரணை நடத்த வேண்டும் என சட்டத்தரணி கேட்டுக் கொண்டதற்கு அமைய நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.